

சரந்தைத் திணை

ஓம்

திருச்சிற்றம்பலம்

செந்தமிழ்ச் செல்வி

திருநெல்வேலித் தென்னிந்திய

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தினின்றும்

திங்கள்தோறும் வெளிவருவது

சிலம்பு ௭	மெய்கண்டான்யாண்டு-௭௱௬ தைத்திங்கள் 1929௵ பிப்ரவரி௴—மார்ச்சு௴	பரல் ௨

கோழைமிட றாககவி கோளுமில வாகவிசை கூடும் வகையால்
ஏழையடி யாரவர்கள் யாவைசொன சொன்மகிழு மீசனிடமாம்
தாழையிள நீர்முதிய காய்கமுகின் வீழநிரை தாறு சிதறி
வாழையுதிர் வீழ்கனிக ளூறிவயல் சேறுசெயும் வைகாவிலே.

சம்பந்தர்

உரை :

'ஏழையடியார்கள்,' இரங்குதற்குரிய அடியார்கள். அவ்வடியார் பெருமக்கள் சிவபிரானை வழுத்துதற்கு இனிய குரலே அவர்கட்கு வேண்டுமென்பதில்லை ; சளி பிடித்துக் கோழை கட்டிய குரலானாலு மாகுக வென்பார், 'கோழை மிடறாக' வென்றார். மிடறு, குரலைக் குறித்தலால் ஆகுபெயர். ஆக, வியங்கோள். இனி அவர்கள் பாடும் பாட்டுகள் செய்யுளிலக்கணப்படியேதான் அமைந்திருத்தல் வேண்டு மென்பது மில்லை யென்பார், 'கவிகோளும் இலவாக' வென்றார். கோள் - கோட்பாடு ; ஆவது இலக்கணம். இன்னும் துறைபோன இன்னிசைப் பயிற்சிதானும் அவர்கட்கு வேண்டுமென்பதில்லை, இயன்ற வரையிற் கூடிய இசை வகைகள் போதுமென்பார், 'இசை கூடும் வகையா' லென்றார். இவ்வாறு குரல் நலமும் மொழிநலமும் இசை நலமும் இலவாதலோடு அவர்கள் இன்ன கருத்தைத்தான் வைத்துப் பாடுதல் வேண்டு மென்பதில்லை, எதைப்பாடினாலும் அவர்கள் வணக்கப் பாட்டுக்குச் சிவபிரான் செவி சாய்த்து மகிழ்வாரென்பார், 'யாவை சொன சொன்மகிழும் ஈசன்' என்றார். சொன, சொன்ன.

அத்தகைய அருள் நிறைந்த சிவபிரானது இருப்பிடம், நெற்றுத் தேங்காய்கள் கமுகமரத்தின்மேல் அடியுலர்ந்து விசையாய் விழ, கமுகின் குலைகள் சிதறி வாழைமரத்தின் பழக்குலைகளில் வீழ்தலும், அவ்வாழை யின் பழங்கள் கீழே கழனிகளிற் சிந்தி ஊறிச் சேருகும் மருத நிலவளம் பொருந்திய திருவைகாவூ ரென்னுந் திருப்பதியிலாகும்.

'ஈசனிடம் வைகாவிலாம்' என்று முடிக்க.

'தாழை' தென்னைக்குப் பெயராதலைத் 'தாழை முப்புடைக்காய்' என்னும் நைடதத்திற் காண்க. 'இளநீர் முதிய காய்' என்பதற்கு 'இளநீர் முற்றிய நெற்றுக்காய்' என்று உரை விரித்துக் கொள்க. நிரை தாறு - அடுக்கடுக்காயுள்ள குலைகள். மாணிக்கவாசகப் பெருமானும்,

" தெங்கம் பழங்கமு கின்குலை சாடிக் கதலிசெற்றுக்
கொங்கம் பழனத் தொளிர்குளிர் நாட்டினை "

என்று இவ்வாறே திருக்கோவையாரில் (ள) வயல் வளத்தைப் புனைந் துரைத்து மகிழ்வர்.

கோங்கமே குரவமே கோழுமலர்ப் புன்னையே கோகுடி முல்லை
வேங்கையே ஞாழலே விம்முபா திரிகளே விரவி யெங்கும்
ஓங்குமா காவிரி வடகரை யடைகுரங் காடு துறை
வீங்குநீர்ச் சடைமுடி யடிகளா ரிடமென விரும்பி னரே.

ஏகாரங்கள், எண்; 'அம்மணிச்சுனை தான் ஆம்பலே குவளையே நெய்தலே தாமரையே என்றிப்பூக்களால் மயங்கி மேதக்கது' என்பதிற் போல (இறைய, உகூ-ம் நூற்பாவுரை). 'கொழுமலர்ப் புன்னை' யென் னுங் குறிப்பாற் கோங்கம் முதலியவற்றை அவ்வவற்றின் மலர்களென்று கொள்க. விம்மு பாதிரி - மலரும் பாதிரிப்பூக்கள். இப்பூக்களெல் லாம் நீரிற் கலந்து வருங் காவிரி யென்றார்; இங்ஙனமே,

" இலவஞாழலு மீஞ்சொடுசுரபுன்னை யிளமருதிலவங்கம்
கலவிநீர்வரு காவிரி "

என்பர் மற்றும். (மாந்துறை)

வடகரையடை குரங்காடுதுறை, வடகரையிற் பொருந்திய திருக் குரங்காடு துறை. 'துறை' யென்பதன் இறுதியில் இரண்டனுருபு தொக்கது. வீங்குநீர், மிக்கநீர்; அதாவது வெள்ளம்.

'அடிகளார் துறையை இடமென விரும்பினர்' ரென்று முடிவு கொள்க. இளவழகனார்

சைவ சமயம்*

[திரு. கா, சுப்பிரமணிய பிள்ளையவர்கள் M. A., M, L.,]

சைவசமயம் என்பது சைவம் சமயம் என்னும் இருசொற்களால் ஆபது. சைவம் என்பது சிவ சம்பந்தம் எனப் பொருள் படும், சமயம் என்பது வழி. சிவத்தொடு சம்பந்தப் படுதற்குரிய வழியே சைவ சமய மாகும். சிவத்தை யடையும் வழி என்றுங் கூறலாம். சிவசம்பந்தமான வழியும் ஆம். சிவநெறி என்ற சொற்றொடரும் இப்பொருளுடையது. சிவமென்னுஞ் சொல் செம்மை என்னும் பண்பி னடியாகப் பிறந்து மங்கலம், இன்பம், தூய்மை, நன்மை என்று பொருள்படும். "செம்மை சேர் நாமந் தன்னைக் கண்களில் தெரியக் கண்டான்" என்ற இராமாயணச் செய்யுளடியில் செம்மை என்ற சொல் மங்கலம் என்னும் பொருளுடையது.

"மன்னுசிவன் சன்னிதியின் மற்றுலகஞ் சேட்டித்த
தென்னு மறையி னியன்மறந்தாய்—சொன்னசிவன்
கண்ணு வுளம்வினையாற் கண்டறிந்து நிற்குங்காண்
எண்ணுன் சிவனசத்தை யின்று"

என்ற **சிவஞானபோத வெண்பாவில்** 'மன்னு சிவன்' என்பதற்குப் பேரின்பத்திற்குக் காரணன் என்றும், 'சொன்ன சிவன்' என்பதற்கு முற்றுணர்வினன் என்றும், அச்செய்யுளின் ஈற்றடியில் சிவன் என்பதற்குத் தூயதன்மையன் என்றும் ஆசிரியர் **சிவஞான யோகிகள்** பொருளுரைத்தமை காண்க. கடவுளைச் **சிவம்** என்ற சொல்லால் சைவர்கள் அழைத்தமைக்குத் தக்க காரணமுண்டு. கடவுள் வழிபாட்டினை வற்புறுத்துவதற்கு அதனைப் போலச் சிறந்த வேறு சொல் இல்லை. **பிரமம்** என்ற சொல் பெரிது என்று பொருள்படும். கடவுள் பெரியவராயிருப்பதால் நமக்கு யாது பயன் என்பார்க்குக் கடவுள் வழிபாட்டினை அது வற்புறுத்தாது.

---

*திருநெல்வேலி, தென்னிந்திய சைவ சித்தாந்த சங்கத்தின் 7, 8-ம் ஆண்டு விழாவில் (1, 2-1-29) செவ்வாய்; புதன்கிழமைகளில் 'நவசக்தி' ஆசிரியர் திருவாளர் திரு. வி. கலியாண சுந்தர முதலியாரவர்கள் தலைமையின் கீழ் நிகழ்த்திய சொற்பொழிவு.

விஷ்ணு என்ற சொல் வியாபகத்தை யுணர்த்தும். காற்று, ஆகாயம் என்பவைகள்போல வியாபகமாயிருத்தலால் கடவுளை ஏன் வழிபடவேண்டும் என்றகேள்விக்கு அச்சொல்லே விடையிறுப்பதில்லை. தமிழில் **விண்டு** என்ற சொல்லும் அத்தன்மையதே. இறைவன் என்பதற்கும் எங்குந் தங்குபவர் என்றே **அடியார்க்கு நல்லார்** பொருளுரைத்தனர், கடவுள் என்ற சொல் மனமொழி மெய்களைக் கடந்துள்ளவர் என்னும் பொருளுடைமையால் அத்தகைய பரம் பொருளொன்றினையே குறிக்குஞ் சிறப்புடைமை அதற்கே உரியது காண்க. எல்லாவற்றையுங் கடந்த பொருள் ஒன்று உண்டு என்பதைக் குறிப்பதற்கே **'உள்'** என்ற விகுதி அதன்கண் அமைந்துள்ளது. இச்சொல்லின் பொருளை,

'நினைப்ப தாக சிந்தை செல்லு மெல்லை யேய வாக்கினால்
தினைத் தனையு மாவ தில்லை சொல்ல லாவ கேட்பவே
அனைத் துலகு மாய நின்னை யைம்பு லன்கள் காண்கிலா
எனைத் தெனைத்த தெப்பு றத்த தெந்தை பாத மெய்தவே'

என்னுந் **திருவாசகத்**திற் காண்க. எல்லாவற்றையுங் கடந்தவன் என்றால் அவனை வழிபடுதல் கூடுமோ? அவனை வழிபடுதலால் யாது பயன்? என்பார்க்குச் சிவம் என்றசொல்லே தக்க விடையளிப்பதாகும். எல்லாவற்றையுங் கடந்தவன் எனினும் இறைவன் உயிர்கட்குத் துன்பத்தை நீக்கி என்றும் நிலைத்த பேரின்பத்தைக் கொடுப்பான் என்னுங் கருத்து **சிவம்** என்ற சொல்லாற் பெறப்படுதலானும், எல்லாவுயிர்களும் அத்தகைய இன்பத்தையே நாடுதலானும் அவ் இன்பத்தைக் கொடுக்கும் முதல்வனை வழி படுதல் வேண்டுமென்பது யார்க்கும் புலனாதல் காண்க. இதனை யறியாதார் கடவுளைச் சிவனென்ற சொல்லால் வழிபடுஞ் சைவ சமயத்தை ஒடுங்கிய நோக்க முடையதென்று குறை கூறுவர். சைவ சமயமே பிற சமயங்களினும் விரிந்த நோக்க முடையதென்பதை அதன் கொள்கைகளை யுணர்ந்தவர்கள் நன்கறிவர்.

மேலை நாட்டினர் **கடவுள், உயிர், உலகம்** என்பவைகளைப் பற்றித் தத்தம் அறிவிற்கு எட்டியவரை ஆராய்ச்சி செய்யும் வகையினைத் **தத்துவ ஆராய்ச்சி (Philosophy)** என்பர். கடவுள் வழி

பாட்டினைப் பற்றிய உண்மைகளை ஆராய்ச்சி செய்தல் சமய ஆராய்ச்சியின்பாற் படும். சமய முறையும் தத்துவ ஆராய்ச்சியும் மேலே நாட்டினர் வெவ்வேருகக் கொண்டனர். இந்நாட்டில் அவற்றை ஒற்றுமைப் படுத்தியே நம் முன்னோர்கள் ஆராய்ச்சி செய்தனர். இந்நாட்டிலும் தத்துவ ஆராய்ச்சி மிக விரிவாகவே முற்காலத்தில் நிகழ்த்தப்பட்டது. **உலகாயதர்** என்பார் நிலம், நீர், தீ, காற்று என்ற நான்கு பொருள்களே உள்ளன என்றனர். **புத்த மதத்தினர்** கணந்தோறும் தோன்றி யழியும் ஞானமும் உண்டு என்றனர். **சமண சமயத்தார்** இவற்ருேடு ஆகாயமும் உயிரும் உண்டு என்றனர், **தருக்கர்** அவற்ருேடு காலமும், திசையும், கடவுளும் உண்டு என்றனர். இவர்கள் அனைவரும் உலகமானது பரமாணுக்களின் கூட்டத்தினுல் உண்டாவது என்பர். **சாங்கியர்** இப் பூத தத்துவங்களை நுட்பமாக ஆராய்ந்து ஐம்பூதங்களும் ஐந்து தன்மாத்திரைகளினின்று வந்தனவென்றும், அவையும் மனமும் ஆங்காரமென்ற தத்துவத்தினின்று வந்தனவென்றும் ஆங்காரம் புத்தி தத்துவத்தினின்று வந்தது என்றும், புத்தி குணதத்துவத்தினின்று வந்தது என்றும், குணம் மூலப் பிரகிருதியினின்று வந்ததால் மூலப் பிரகிருதியே உலகத்திற்கு மூலம் என்றுங் கூறினர். அவர்களும் கடவுள் உண்டென்று அறிந்துகொள்ளவில்லை. யோக நூலெழுதிய **பதஞ்சலி முனிவர்** கடவுள் உண்டென்று ஒப்புக் கொண்டாலும் உலகத்தைப் பற்றிய உண்மைகளையெல்லாம் சாங்கிய நூலின் படியே மேற்கொண்டனராதலின் **யோகமதமும்** கடவுட்டன்மையை முற்றிலுந் தெளிவு படுத்தவில்லை. **சாங்கியர்** கூறிய தத்துவ அமைப்பையே **ஏகான்மவாதிகளும், வைணவர்களும்** தழுவிக்கொண்டனர். **ஏகான்மவாதியர்** ஒரு பரம்பொருள் தவிர உலகமென்பதேயில்லையென்று முடிவு கட்டினர். **வைணவர்** பால் தயிரானாற்போலக் கடவுளே உலகமாயினர் என்றனர். இவர்களனைவர்களுடைய கொள்கைகளும் சைவரால் புறமதக் கொள்கைகளென்று கருதப்பட்டன. **சாங்கியர்** கூறிய மூலப் பகுதிக்கு மேலே இருவகைப்பட்ட பன்னிரண்டு தத்துவங்கள் உள்ளன என்றும், கடவுள் வேறு, உயிர் வேறு என்றுங் கண்டு **சித்தாந்தம்** செய்தவர்கள் **சைவ சமயப் பெரியோர்கள்,**

பல முனிவர்களின் ஆராய்ச்சியைக் கூறும் உபநிடதங்கள் (௧அ) நூற்றெட்டினுள்ளும் பழமையான **சுவேதா சுவதர உபநிடதம்** கடவுள், உயிர், சடவுலகத்திற்கு மூலமாகிய மாயை என்னும் சடசத்தி என்பவைகளை ஆராய்ந்து உலகத்திற்கு ஆதிகாரணம் மாயையுமல்ல, உயிருமல்ல, கடவுளே யாவர் என்று முடிவு கட்டியது. அதனுள் முழுமுதற் கடவுள் சிவமென்பதைப் பெரியோர்கள் திருவருளினால் உணர்ந்தார்களென்று கூறப்பட்டது. மேற்படி உபநிடதக் கருத்தினையே

"தற்பரா வுலகுக் காதி காரணந்தான் றலைமையி லுயிருடன் சடத்தைச்
சொற்றிடிற் பழுதாற் பிரமமாமெனவே துணிந்துபின் பிரமமா சென்றாய்
உற்றிடு மான்றோ ருமையரு ளேக்கா லுணர்ந்தனர் நீயென வென்னு
வற்புறச் சுவேதாச் சுவதரந் தமது மறைமுடி வுரைத்திடு மன்றே"

என்ற **சிவதத்துவ விவேகச்** செய்யுளால் அறியலாம்.

ஒவ்வொருவரும் தமக்கு உயிர் ஒன்று உண்டென்பதை நன்கு அறிவார்கள். உயிர் அறிவுடைய பொருளென்றும், உடம்பு அறிவில்லாத பொருளென்றும் எவரும் அறிவர். உடம்பு ஐம்பூதத்தாலாயது. உடம்பினுள்ள ஐம்பூதங்களும் உலகத்திலுள்ள ஐம்பூதங்களை ஆதாரமாக உடையபது. உலகத்தை நடத்துந் தலைவன் அறிவுடைய பரம்பொருளென்பது சைவ நூல்களால் துணியப்பட்ட கொள்கையாகும். சடமாகிய உலகம் தானே இயங்காமையின் அதற்கு ஓர் அறிவுடைய தலைவன் வேண்டுமென்பது நம்முடைய அறிவிற்குப் பொருத்தமானதே. உடம்பிலுள்ள ஐம்பூதங்களும் உலகத்திலுள்ள ஐம்பூதங்களை ஆதரவாகக் கொண்டிருப்பதுபோல உடம்பிலுள்ள உயிராகிய அறிவுப் பொருள் உலகத்திற்குத் தலைவனாகிய பேரறிவுப் பெரும் பொருளைத் தனக்கு ஆதரவாக வுடையபது. இக்கருத்தினையே **திருமூலமாமுனிவர்**

"சத்த முதலைந்தும் தன்வழித் தான்சாரிற்
சித்துக்குச் சித்தன்றிச் சேர்விடம் வேறுண்டோ
சுத்த வெளியிற் சுடரிற் சுடர்சேரு
மத்த மிதுகுறித் தாண்டுகொ ளப்பிலே"

என்னுந் **திருமந்திரத்** திருப்பாட்டில் அறிவுறுத்தருளினர்.

இதுகாறுங் கூறியவாற்றல் சைவ சமயமானது உயர்ந்த தத்துவ ஆராய்ச்சியுடைய தென்பதும், பிறகொள்கையாளர் கண்டு கூறிய இருபத்துநான்கு தத்துவங்களையும் ஒப்புக்கொண்டு அவர்கள் காணுத பன்னிரண்டு தத்துவங்களையும், கடவுளின் உண்மைத் தன்மையையும், உயிரின் உண்மைத் தன்மையையும், கடவுள் வழிபாட்டின் இன்றியமையாமையையும் இனிதறிந்து விளக்கும் பெருமை யுடையதென்பதும் தெளியப்படும்.

இனி, சமய ஆராய்ச்சி முறையின் வைத்துச் சைவ சமயத்தினை ஆராய்வாம்.

சமயம் என்பது மக்கள் தங்கள் வாழ்க்கையின் பயன்கருதித் தங்கட்கு மேற்பட்ட ஒரு பொருளை அச்சத்தினுலோ அன்பினுலோ நாடுங் காலத்தில் ஏற்பட்டதென்று மேலைநாட்டினர் முடிவு கட்டியிருக்கின்றுர்கள், முதலிற் பிதுர்க்களுடைய வணக்கமும் பின்னர்ச் சிறு தெய்வங்களின் வழிபாடும் மேற்கொள்ளப்பட்டு மக்கள் அறிவு வளர்ந்து திருத்தமெய்தியபோது ஒரு கடவுளின் வழிபாடு நிலை பெறுதலாயிற்று என்பது ஒவ்வொரு நாட்டின் சமய வரலாற்றினுல் இனிது விளங்கும். **சிவஞான சித்தியாரில்** எத்தெய்வத்தையும் வழிபடுவதற்கு முன் நல்லொழுக்கம் வேண்டுமென்பது வலியுறுத்தப்பட்டது. அச்செய்யுள் வருமாறு:—

"ஒழுக்கம் அன்பு அருள் ஆசாரம் உபசாரம் உறவு சீலம்
வழுக்குஇலாத் தவந் தானங்கள் வந்தித்தல் வணங்கல் வாய்மை
அழுக்குஇலாத் துறவு அடக்கம் அறிவொடு அர்ச்சித்த லாதி
இழுக்குஇலா அறங்கள் ஆனுல் இரங்குவான் பணி யறங்கள்"

இதனுல் நற்பழக்கமும், தொடர்புடையார் மாட்டு அன்பும், எல்லா உயிர்களிடத்தும் இரக்கமும், புறத்தூய்மை அகத்தூய்மையும், தக்கோரை நல்வர வேற்றலும், சுற்றந்தழுவுதலும், நற்குண முடைமையும், ஐம்பொறியடக்கமும், வறியார்க்கு ஈதலும், பெரியோர் மாட்டு வழிபா டுடைமையும், பணிவும், வாய்மையும், பிறர்மனை விழையாமையும், தீநெறிக்கட் செல்லாமையும், பகுத்தறிவும் ஆகிய நல்லியல்புகள் ஒருவனுக்கு உளவாதல் வேண்டும் என்பது குறிக்கப்பட்டது. அத்தன்மைகளுடையவனே தான்

வழிபட விரும்பிய தொரு தெய்வத்தை மனமொழி மெய்களால் வழிபட்டால் அத்தெய்வ வாயிலாகக் கடவுள் அவனுக்கு அருள் புரிவர்.

அது

"மனமது நினைய வாக்கு வழுத்த மந்திரங்கள் சொல்ல
இனமலர் கையிற் கொண்டுஅங்கு இச்சித்த தெய்வம் போற்றிச்
சினமுதல் அகற்றி வாழுஞ் செயலற மானல் யார்க்கு
முனமொரு தெய்வ மெங்குஞ் செயற்குமுன் னிலையா மன்றே"

(சித்தியார்)

என்பதனாலறிக, இதனால் சைவசமயத்தின் விரிந்த நோக்கம் புலனாதல் காண்க. எத்தெய்வத்தை வழிபடினும் முழுமுதற் கடவுளே பலன் கொடுப்பதனால் அம்முழுமுதற் கடவுள் வணக்கமே பிற தெய்வ வழிபாட்டினும் சிறந்ததாகும். தாம் வழிபடுந் தெய்வங்களின் தன்மையை யறிவோர் இறுதியாக முழு முதற் கடவுள் வழிபாட்டினையே மேற்கொள்வர், பிற தெய்வங்களை முழுமுதற் கடவுளென்று முதலிற் கருதினும் தவம் முற்றியபோது சிறு தெய்வங்களைக் கைவிட்டு முழுமுதற்கடவுள் வணக்கத்தினைத் தலைப்படுவர். ஏனைத் தெய்வங்களை வழிபடுவோர்க்கு அத்தெய்வங்களின் பதவியே கிடைக்கும், அப்பதவிகளைக் கிட்டியபின் அவைகட்கு மேற்பட்ட வீட்டினை நாடுங்காலத்து ஒரு பரம்பொருளின் வழிபாடு இன்றியமையாததாகும். மனிதன் ஆகாயத்தைத் தோல்போற் சுருட்டக்கூடுமானல் சிவனையறியாமல் வீடெய்துதல் கூடுமென்று **சுவேதா சுவதர உபநிடதம்** கூறிற்று, அக்கருத்தினைய பாட்டு வருமாறு:—

"மானிடன் விசும்பைத் தோல்போற் சுருட்டுதல் வல்லோனாயின்
ஈனமில் சிவனைக் காண திடும்பைதீர் வீடுமெய்து
மானமார் சுருதி கூறும் வழக்கிவை யாத லாலே
யானம ரிறையைக் காணு முபாயமே யறிதல் வேண்டும்."

(காஞ்சிப்புராணம் சனற்குமாரப்படலம், ௬௩)

முழுமுதற் கடவுளைத் தவிரப் பிறதெய்வங்கள் யாவும் வெவ்வேறு தத்துவங்களிலுள்ள புவனங்களை இருப்பிடமாக உடையன. மேல் தத்துவங்களிலுள்ள தெய்வங்கள் கீழ்த் தத்துவங்களிலுள்ள

தெய்வங்கட்கு மேற்பட்டவை, எல்லாத் தெய்வங்களும் முழுமுதற் கடவுட்கு வேறாய உயிர்களேயாம். அவ்வுயிர்கட்கு விருப்பு வெறுப்பு முதலிய உயிர்க் குணங்கள் உண்டு, புகழினையும் அதிகாரத்தினையும் விரும்பி அவர்கள் கடவுளை வழிபடுவதாகத் திருவாசகத்துட் கூறப்பட்டது.

'வாழ்த்துவதும் வானவர்கள் தாம்வாழ்வான் மனநின்பால்
தாழ்த்துவதுந் தாமுயர்ந்து தம்மையெல்லாந் தொழவேண்டிச்
சூழ்த்துமது கரமுரலுந் தாரோயை நாயடியேன்
பாழ்த்தபிறப் பறுத்திடுவான் யானும்உன்னைப் பரவுவனே'

அவர்கள் செய்த பெருந்தவத்தால் தங்கள் வாயிலாகத் திருவருட் சத்தி தொழில் நடத்தப்பெற்றவர்களாதலின் தம்மிற் றாழ்ந்தோரால் வழிபடுதற்குரியராயினர். அவர்கள் பதவிகள் என்றும் நிலைத்தனவல்ல, அவர்கள் தவறு செய்யின் கடவுளாற் றண்டிக்கப்படுவர். அவர்களை வழிபடுவார்க்குப் பயன் கொடுப்பது திருவருட் சத்தியேயாதலால் அத்திருவருட் சத்தியோடு கூடிய கடவுளே யாதொரு தெய்வத்தை வழிபட்டாலும் வழிபடுவார் தகுதிக்குத் தக்கவாறு பயன்கொடுக்குமென்றும், மற்றத் தெய்வங்கள் வேதனைப்படும் பிறக்கும் இறக்கும் மேல்வினையுஞ் செய்யும் என்றுங் கூறுமுகத்தானே முழுமுதற் கடவுளுக்கும் ஏனைத் தெய்வங்களுக்குமுள்ள வேறுபாடு தெள்ளிதிற் சுட்டப்பட்டது. அச்செய்யுள் வருமாறு:

'யாதொரு தெய்வங் கொண்டீர் அத்தெய்வ மாகி யாங்கே
மாதொரு பாக னார்தாம் வருவர்மற் றத்தெய் வங்கள்
வேதனைப் படும்இ றக்கும் பிறக்கும்மேல் வினையுஞ் செய்யும்
ஆதலா னிவையி லாதான் அறிந்தருள் செய்வ னன்றே.'
(சித்தியார்)

இந்திரனை வழிபடுவார்க்கு விண்ணுலக பதவியும், அயனை வழிபடுவார்க்கு அயனுலக பதவியும், அரியை வழிபடுவார்க்கு விண்டுலக பதவியும் இறைவன் கொடுப்பான். அப்பதவிகளை எய்தினோர் அவற்றின் தன்மையையும், நிலையாமையையும் உணர்ந்த பின்னர் பதங்கள் யாவையுங் கடந்த வீட்டின்பத்தை விழைவர். அவ்வீட்டின்பத்தைக் கொடுத்தற்கு உரியோன் முழுமுதற் கடவுளானதினாலே அம் முழுமுதற் கடவுள் வழிபாட்டினைச் சமய நெறி நிற்

பார் தமது அனுபவத்தினாலே தலைப்படுவர். இக்கருத்துப் பற்றியே

'புறச்சமய நெறிநின்றும் அகச்சமயம் புக்கும்
புகன்மிருதி வழியுழன்றும் புகலுமாச்சிரம
அறத்துறைகள் அவையடைந்தும் அருந்தவங்கள் புரிந்தும்
அருங்கலைகள் பலதெரிந்தும் ஆரணங்கள் படித்தும்
சிறப்புடைய புராணங்கள் உணர்ந்தும் வேத
சிரப்பொருளை மிகத்தெளிந்துஞ் சென்றாற் சைவத்
திறத்தடைவர் இதிற்சரியை கிரியா யோகஞ்
செலுத்தியபின் ஞானத்தாற் சிவனடியைச் சேர்வர்.
(சித்தியார்)

இவ்வாறன்றித் தத்துவநூலாராய்ச்சியினாலே முழுமுதற் கடவுளை முதற் கண்ணேயே காமியங் கருதி வழிபட்டும் பின்னர்ப் பயன் கருதாது வழிபடுதலும் நிகழற்பாலதே. எவ்வாறாயினும் முழுமுதற் கடவுளை வழிபடுகின்றவர்களே சைவரெனப்படுவர். பிற தெய்வங்களை இறைவனது அடியார்களாகச் சைவர்கள் வழி படலாம். பயன் கருதி வழிபடும் முறை பொதுமுறை யென்றும், பயன் கருதாது வழிபடும் முறை சிறப்புமுறை யென்றும் கூறப் படும். கெடுதலில்லாத வேள்வி வாயிலாகப் பயன் கருதி இறை வனை வழிபடுதல் **வேதநெறி** எனப்படும், பூவும், நீருங்கொண்டு கடவுளைப் போற்றுதல் **சைவமுறை**யாகும். இவ் இரு நெறியும் முழு முதற் கடவுளாகிய சிவத்தின் வழிபாட்டினை அடிப்படை யாக உடைமையால் இருநெறியுங் கலந்த ஒரு நெறியை **வைதிக சைவம்** என்பர். வைதிக சைவமானது பிற தெய்வங்களின் வழி பாட்டையும் வெவ்வேறு பக்குவமுடைய ஆன்மாக்களுக்கு உரி யனவெனக் கருதி அவற்றையுந் தழுவிக் கொள்ளுதலால் அவற் றை அங்கமாக உடையதென்று கருதப்படும். இக்காரணத்தினால் சைவ சமயமானது பிற சமயங்களை இகழுந் தன்மையதன்று என்று தெளிக.

சமயங் காரணமாக ஒருவரைப் பழித்தல் தக்கதன்று, எச் சமயத்தில் எவர் பிறந்தாரோ அவர் அச்சமய முறையைத் தழுவி நடத்தல் தவறாகாது, அவர் பிறிதொரு சமயத்தைத் தன் சம

யத்தினும் சிறந்ததென்று ஆராய்ந்து கண்டால் அச்சமயத்திற்கு அவர் செல்லுதலும் ஒரு குறைவாகாது, பலசமயத்தாரும் தத்தம் வழியிலே செல்லுதற்குரியர். ஆனால் சமயப் போர் விளைத்துப் பகைமை பாராட்டுதல் தக்கதன்று. ஒவ்வொரு சமயத்தாரும் தத்தங் கொள்கைகளை எடுத்துக் கூறிப் பிற சமயத்தாரோடு நியாய மான வாது செய்யலாமே யன்றிப் பிற சமயத்தாரை இகழ்தல் பெருந்தவறாகும். ஒரு சமயம் உயர்ந்தும், மற்றொரு சமயம் தாழ்ந் தும் இருப்பதாகக் கருதுகின்ற ஒருவர் தாழ்ந்த சமயத்திலுள் ளாரை அச்சமயத்திற் பிறந்தமை காரணமாக இழித்துரைத்தல் கூடாது. பிறப்புப் பற்றி மேன்மை தாழ்மை பாராட்டுதல் பெரி யோரால் கடியப்பட்டுள்ளது. ஒழுக்கம் பற்றியேதான் மக்களுக்கு உயர்வு தாழ்வு ஏற்படுதற் குரியது. உயர்ந்த சமயத்திற் பிறந்த வன் ஒழுக்க மில்லாதவனாயிருந்தால் அவன் தாழ்ந்த சமயத்திற் பிறந்த ஒழுக்க முடையவனைப் பார்க்கிலும் கீழ்ப்பட்டவனே யாவன், உயர்ந்த சமயத்திற் பிறந்தமையினாலே ஒருவனுக்குப் பெருமை ஏற்பட்டுவிடாது, அச்சமயக் கொள்கையை வழுவற மேற்கொண்டு ஒழுகுவதனாலேதான் ஒருவனுக்கு உண்மைச் சிறப்பு ஏற்படும். அவ்வாறு உண்மைச் சிறப்பு எய்திய ஒருவன் தற் பெருமை பாராட்டுதல் தவறாகுமாதலின் தனது சமயச் சிறப்பினைத் தனக்குள்ளதாகக் கருதிப் பிற சமயத்தாரைத் தாழ்ந்தவரென்று ஒதுக்குதல் நியாய முறையன்று. உயர்ந்த சமயத்தின் உண்மை உயர்வையும், தாழ்ந்த சமயத்தின் உண்மைத் தாழ்வையும் அவன் தக்க காரணங்களோடு செற்றம் பகையுமில்லாது எடுத்து விளக்கு தல் சாலுமே யன்றிச் சமயங்களின் உயர்வு தாழ்வுகளை மக்களுக்கு ஏற்றி அவர்களைப் பழித்தல் நியாயமன்று. இக்கருத்துக்களைச் சைவர்கள் மனதிற்கொண்டு சமயப் பொறுமையை மேற்கொள்ள வேண்டும். மேற்கொள்ளின் சமயப் போரினால் வரும் தீங்குகள் இலவாய் ஒழியும். இதுவே சைவர்களது முதற்கடமையாகும்.

இனி, சைவர்களுள் ஒவ்வொருவரும் சைவ சமயத்தில் புகு தற்குரிய தகுதி தமக்கு இருக்கின்றதா வென்பதை ஆராய்ந்து அஃது இல்லையாயின் அதனைப்பெற முயலுதல் வேண்டும். ஒழுக்க

முங் கடவுட் கொள்கையும் வேண்டுமென்பது முன்னமே கூறப்பட்டது.

"வாழ்வெனு மையல் விட்டு வறுமையாஞ் சிறுமை தப்பித்
தாழ்வெனுந் தன்மை யோடுஞ் சைவமாஞ் சமயஞ் சாரும்
ஊழ்பெற லரிது சால வுயர்சிவ ஞானத் தாலே
போழிள மதியி னானைப் போற்றுவா ரருள்பெற் றாரே"
(சித்தியார்)

என்றமையால் செல்வச் செருக்கு, கல்விச் செருக்கு, அதிகாரச் செருக்கு முதலிய இயல்புகளில்லாதவராய் வறுமை காரணமாக ஒழுக்கத்தையும், சமயத்தையுங் கைவிடாதவராய் எல்லாம் இறைவன் செயலாதலின் திருவருள் வழிநிற்கும் தாழ் மனமுடைமையே கடமையென்று கருதி நல்லுள்ளம் உடையவராய் இருப்பவரே சைவ சமயத்திற் புகும் தகுதியுடையவரென்பது அறியற்பாலது. சைவ சமய அடையாளங்களை மாத்திரம் அணிந்தமையால் ஒருவர் சைவ சமயியாகார், அடையாளங்களின் உட்கிடைகளையறிந்து அதனை மனதிற் சிந்திக்க வேண்டும். திருநீறானது உலக நிலையாமையையும் திருவருட் பேற்றினையும் விளக்குவதால் அதனை அணிகின்றவர்கள் நிலையாமை யுணர்ச்சியையும் திருவருள்வழி நிற்றலும் கடைபிடித் தொழுகவேண்டும். உருத்திராக்கமென்பது கடவுள் உயிர்களின்மீது வைத்த இரக்கத்தைக் காட்டுதலால் அதனை அணிகின்றவர்கள் எவ்வுயிர்களிடத்தும் இரக்கமுடையவர்களா யிருத்தல் வேண்டும்.

(தொடரும்)

சாத்தனார் பாத்திறல்

[பண்டிதர் திரு. ந. மு. வேங்கடசாமி நாட்டாரவர்கள்]

(சு-ம் சிலம்பு, எஉசு-ம் பக்கத் தொடர்ச்சி)

மணிமேகலையும் சுதமதியும் காவிரிப்பூம் பட்டினத்து மறுகிற் செல்லும் பொழுது, அங்கே பற்பல காட்சிகளைக்கண்டு குழாம் குழாமாய் நிற்கும் மாந்தர்கள், முன்னம் விராடன் பேரூர்க்கண் பேடி வடிவங்கொண்டு சென்ற விசயனைக்கண்டு சூழ்ந்தமாக்களைப்

போல மணிமேகலையைச் சூழ்ந்துகொண்டு 'பேரழகுடைய இவளை அருந்தவப்படுத்திய தாய் மிகக்கொடியவள், இவள் மலர் பறித்தற்கு வனம் புகுவளாயின் அங்குள்ள அன்னப்புள் முதலியன இவள் நடை முதலியவற்றைக் கண்டு என்னபாடுபடா' என்று இவை போல்வன சொல்லி அவள் அழகைப் பாராட்டி வருந்தி நிற்க, அவ்விருவரும் மலர்வனத்தை யடைந்தனர்; என இக்காதையை நடாத்தி முடிக்கின்றனர் ஆசிரியர். யாதேனும் ஒரு கதை நிகழ்ச்சியைத் தலைக்கீடாகக்கொண்டு உலக இயற்கைகளையும் பல்வேறு வகைப்பட்ட மக்களின் ஒழுகலாறு முதலியவற்றையும் உள்ளவாறுணர்த்தி இன்பம் விளைப்பது நல்லிசைப்புலவரின் சிறந்த நோக்கமாகும். நகரங்களும், சீறூர், பட்டி முதலியவைகளும் அவற்றின் அமைப்பினாலன்றி அங்குவாழும் மக்களின் நடையுடை முதலியவற்றாலும் வேற்றுமை யுறுகின்றன. செல்வப்பெருக்கும், செயற்கை வனப்பும், எழில் விளையாட்டும், இன்பச் செலவும் நகரங்களில் விஞ்சிக் காணப்படுகின்றன. நாம் ஒரு நகரப்பெருந்தெருவிலே மாலைப்பொழுதில் உலாவருவோமாயின் இடையே எத்தனையோ பல காட்சிகள் எதிர்ப்படுகின்றன. அற்றை நாளிலே மிகப் பெரியதொரு நகரமாய் விளங்கிய புகாரின் மறுகிலும் பலதிறப்பட்ட காட்சிகள் எதிர்ப்படுதல் இயல்பேயன்றோ? அவையிற்றையே தண்டமிழாசானாகிய சாத்தனாரும் ஓவியம் வரைந்து காட்டினாற்போல் நம் உளக்கண்ணுக்குப் புலனாகுமாறு செழுந்தமிழ்ப் பாவாக யாத்து வைத்தனர்.

சமண சமயத்து உண்ணா நோன்பி யொருவன் உறியிற் பொருந்திய குண்டிகையும் பிரப்பங்கோலும் உடையவனாய்க் கழுவாத மேனியனாய் வருந்துதலை யுடைய யானை போன்று அசைந்த நடையுடன் அவ்வீதியில் வந்துகொண் டிருக்கின்றனன். அவன் உயிர்கள் மாட்டு எத்தனை இரக்க முடையனென்பதனை,

"காணாவுயிர்க்குங் கையற் றேங்கி"

என்னும் சிறு தொடரால் ஆசிரியர் அழகு பெற விளக்கியுள்ளார். கண்ணுக்குப் புலனாகாத நுண்ணுடம்புடைய உயிர்களும் தனது நடத்தல் முதலிய செயல்களால் என்ன துன்பமுறுமோ என்று

செயலற்று ஏங்கிப் பையப்பைய நடந்து செல்லும் அந்நோன்பியை ஓர் களிமகன் கண்டு வழிமறித்து,

"வந்தீர் அடிகள்! நும் மலரடி தொழுதேன்!!
எந்தம் அடிகள் எம்முரை கேண்மோ"

எனப் பீடிகை போட்டுக்கொண்டு, தன் கையிலுள்ள மதுச்சாடியை அவன் முன் நீட்டி, 'இஃது இம்மையும் மறுமையும் இறுதியிலின்பமும் தருவது, என் தலைமகன் உரைத்தது, அழுக்குடையாக்கையிற் புகுந்த நும்முயிர் புழுக்கறைப்பட்டோர் போன்று உளம் வருந்தாது இதனை உண்பீராக, என்னக் கள்ளும் ஊனும் கடிந்தவனாகிய அந்நோன்பி, சீலமில்லாரொடு வாயாற் பேசுதலும் நேரிதன்றாகலின் அவன் அப்புறஞ் செல்லுமாறு கையை அசைத்துச் சைகை செய்யவும், அவன் செல்லானுய்த் 'தெங்கின் கொழுமடலில் விளைந்த இத்தேறலின்கண் கொலையும் உண்டோ, இதனை உண்டு தெளிந்து இந்த யோகத்தின் உறுபயனைக் கண்டால் பின்பு எம்மைக் கையாலகற்றுதிர், இதனை ஒருமுறையேனும் உண்பீர்' என்று சூளுற்று இரக்கின்றனன்; இதனைப் பார்த்துக்கொண்டு நிற்கின்றது ஓர் குழு.

சிறிது அப்பாற் செல்வுழி, மையலுற்றவன் (பித்தன்) ஒருவன் அலரி மாலையாற் கட்டிய தோள்களை யுடையனுய், எருக்கமாலை யணிந்தவனுய், கந்தையுடன் சுள்ளிகளைச் சேர்த்துக் கட்டிய உடையினையுடையனுய், உடல் முழுதும் நீற்றினைப் பூசிக்கொண்டு, பலரோடும் பொருத்தமில் சொற்களைப் பேசி, அழுதலும் விழுதலும் அரற்றுதலும் கூவுதலும் தொழுதலும் எழுதலும் சுழலுதலும் ஓடுதலும் ஒதுங்கி நிற்றலும் நிழலொடு சினத்தலும் போல்வன செய்கின்றான்; இவனை இரக்கத்துடன் பார்த்து நிற்கின்றது ஓர் குழு. பித்தேறியவன் செய்கைகள் இதிற் பட்டாங்கு புலப்பட வைத்திருத்தல் வியக்கற்பாலது.

இன்னும் சிறிது தூரஞ் செல்லுங்கால், பகற் கூத்தியற்றுவார் பெண்ணியல்பு மிக்கு ஆணியல்பு விரவிய பேடிக்கோலம் பூண்டு நடிக்க அதனைக் கண்டு நிற்கின்றது ஓர் குழு.

மற்றும், உயரிய நிலையினையுடைய மனைகள் தோறும் ஒள்ளிய சுதைகொண்டு வித்தகர் இயற்றிய பலதிறப்பட்ட கண்கவர் ஓவியங்களை ஆண்டாண்டுக் கண்டு நிற்கின்ற மாந்தரும் பலர்.

பின்னும், விழாச்செய்து முடித்த வீதியின் கண்ணே செல்வ மகளிர் சிலர் கூடி நின்று, பொன்னணிற் கோத்த நன்மணிக் கோவையும் ஐய வியப்பிய நெய்பணி முச்சியும் செவ்வாய்க்குதலையும் மெய்பெறு மழலையும் விளங்கும் பூணுமுடைய இளம்புதல்வரை மயிரிடத்தே சுற்றிய மூன்று கோவையாகிய முத்துவடம் பிறை போலும் அணியின்மீது தாழவும், அற்றங்காவாச் சுற்றுடைப் பூந்துகிலுடன் தொடுத்த மணிக்கோவை அசையவும் பொற்றேரின் மேலுள்ள யானையில் ஏற்றிவைத்து, 'ஆலமர் செல்வன் மகனாகிய முருகன் விழாவிற்குக் கால் கொள்ளுதலைக் காண்பீராக' என்று கூற, அதனைக் கண்டு நிற்பாரும் பலர். சிவபெருமான் இங்கே 'ஆலமர் செல்வன்' என்று கூறப்பட்டிருத்தல் போன்றே சிலப்பதிகாரத்தும் எட்டுத் தொகை, பத்துப்பாட்டுக்களினும் கூறப்பட்டிருத்தலை நோக்கின், ஆலின் கீழே தென்முகமாகவமர்ந்து நால்வர்க்கு ஒளிநெறி காட்டிய இத்திருவுருவினைப் பண்டு தொட்டுத் தமிழர்கள் சிந்தித்து வழிபாடாற்றிப் பயனெய்தி வந்தமை புலப்படும். மற்றும், அவன் மகனாவான் என்றும் இளநலமுடையனாகலின் 'முருகன்' எனப்படுவான் என்பதும், அவற்கும் அங்ஙனமே விழாச் செய்து வழிபாடாற்றி வந்தனர் என்பதும் பண்டைச் செந்தமிழ்ப் பனுவல் பலவற்றானும் பெறப்படும்;

> "ஆலமர் செல்வன் அணிசான் மகன்விழாக்
> கால்கோளென் றூக்கிக் கதுமென நோக்கி"

என **மருதக் கலி**யுள் வருதலுங் காண்க.

இங்ஙனம் களிமகன் பின்னிற்பார் முதல் ஆலமர் செல்வன் மகன் விழாக் கால்கோளெனக்கண்டு நிற்பார் இறுதியாகக் கூறிய அனைவரும் மணிமேகலையைப் புறஞ்சூழ்ந்து அவளைத் தவநெறிப் படுத்திய தாயை இகழ்ந்து, 'இவள் மலர்வனம் புகில் ஆங்குள்ள அன்னங்கள் இவள் நடைக்கு நாணாது நடக்க வல்லுநகொல்லோ, மயில்கள் இவள் சாயலைக் கற்பனகொல்லோ, கிளிகள் இவள் கிள

விக்கு எஞ்சலகொல்லோ என்றிவைபோல்வன சொல்லி இனைந்துக,

"குரவமும் மரவமும் குருந்தும் கொன்றையும்
திலகமும் வகுளமும் செங்கால் வெட்சியும்
நரந்தமும் நாகமும் பரந்தலர் புன்னையும்
பிடவமும் தளவமும் முடமுட் டாழையும்
குடசமும் வெதிரமும் கொழுங்கா லசோகமும்
செருந்தியும் வேங்கையும் பெருஞ்சண் பகமும்
எரிமல ரிலவமும் விரிமலர் பரப்பி"

வித்தகர் இயற்றிய சித்திரப்படாம் போர்த்தது போலத் தோன்றிய உவ வனத்தைச் சேவடி நிலம் வடுவுறுமல் சுதமதியோடும் மணிமேகலை அடைந்தனள்; எனக் கூறியுள்ள இச்சிறு பகுதியிலிருந்தே சாத்தனாரின் புனைந்துரை யாற்றலும், தண்டமிழ்த்திறனும் இனிது விளங்குமாறு காண்க.

தற்கால வியக்கத்தில் சமயங்களின்பாடு

[அ. வரதநஞ்சைய பிள்ளையவர்கள்]

(௬-ம் சிலம்பு,—௬௬௬-ம் பக்கத்தொடர்ச்சி)

சமயக்கோட்பாடு போற்றும் அன்பர்காள், தொன்றுதொட்டு ஆன்றோரொழுக்க முறையின் வந்த நம் அரும்பெரும் சமயங்களைக் குறைகூறி இழித்தலர் தூற்றும் தற்கால வியக்க வினத்தினரை நொந்துகொள்வதன் முன்னம், அவர்கள் கூறும் வண்ணம் நம் சமயக் கோட்பாடுகளினும் நம் வழக்க முறைகளினும் தவறுபாடுகளுள்ளனவோ என ஆய்ந்துணர்ந்து ஏதேனும் குறைபாடுகள் காணப்படுமாயின், அதன்பொருட்டு நம்மை நாமே நொந்துகொள்வது அறிவுடைமையாகும். ஒரு பொருளையே குறிக்கொண்டு கருத்தூன்றிய விருப்பத்தோடு நோக்குநர், அதனினும் சிறந்த பிறபொருட்களின் உயர்வும் நன்மையும் தோன்றப்பெறார், இவ்வியற்கையானே, பிறவியாலொப்புமையுடைய மன்பதைகளிற்சிலரை இழிந்தோரென ஒதுக்கியும், சிலரை உயர்ந்தோரென மதித்தும் வருவது பொருந்தாதென்னும் உணர்ச்சி ஒன்றையே மேற்கொண்டு, சமயங்களின் அடிப்

படை ஒழுக்கங்களையோ தத்துவங்களையோ நினைத்துப்பார்க்க நேரமின்றி, அவற்றின் மேற்போக்காகக் காணப்படுங் குற்றங்களை மட்டும் துருவிக் கண்டுபிடிக்கும் நுண்ணிய அறிவினராய்த் தங்கொள்கைகளை வற்புறுத்திப் புதிய சமயத்தை நிலைநாட்டத் தோன்றிய சுயமரியாதையாளர்மேற் றவறில்லையாம். ஒருபாற் கோடாது நன்னிலைப்பட்ட வுள்ளத்தோடு காண்போமெனினும், நம்புராணங்களிற் சிலபல புனைந்துரைகள் பொதிந்திருப்பதையும் அவற்றுட் சில கதைகள் சிறிதும் உள்ளீடற்றனவும் மிகவும் வெறுக்கத்தக்கனவும் பிறர் எள்ளி நகைத்தற் கிடந்தருவனவுமாக இருப்பதையும் அறிவோம். மேற்கோளாக ஒருகதை நம் சைவ புராணங்களுட்டலைமையுற்ற சிவமா புராணத்துள்ளதைச் சென்ற ஆண்டில் திரிசிரபுரம் சைவசித்தாந்த சபைக்குத் தலைமைபூண்ட நம் **உயர்திரு மறைமலையடிகள்** எடுத்துரைக்கக் கேட்டேன். அந்தோ! அப் பாழ்த்தகதை எதற்காக பாரால் கட்டப்பட்டதோ? அறியக்கூடவில்லை, அக் கதையை உற்றுக் கேண்மின் உரைக்கின்றேன். "ஒரு காலத்து உமையம்மையார் இறைவனை அறியாமல் நீராடற் பொருட்டுச் சென்று அக்குளக் கரையில் யாவரும் அணுகாமற் காவல் புரிதற்கெனத் தம் உடம்பிற் சிறிது தடவி மொத்தையாகத் திரண்ட அழுக்கைப்பிடித் துயிர்தந்து பிள்ளையார் (விநாயகர்) எனப் பேரிட்டு ஆண்டே நிறுவிப் புனலாடப் புக்கனர். சில நொடிகட்குப் பின்னர் அம்மை போந்தவிடம் அறியாது தேடிவந்த சிவபிரானைக் கரைக்கட் காவல் புரியும் அழுக்குருண்டைப் பிள்ளையார் 'ஆண்டணுகல் கூடாது அம்மை புனலாடுகின்றனர்' எனத் தடுத்தனராகப் பெருமானார் மிகவும் வெகுண்டு "எம்மைத் தகைக்கும் நீ யாவன்" எனப் பிள்ளையார் தலையைத் துமித்தனர். தமது அருமந்த மகவு தலை துமிக்கப்பட்டு வீந்த செய்தி யுணர்ந்த அம்மை மிகவும் வருந்தி முறையிட் டரற்றிடப் பிரானார், 'ஓ! இவன் நின் மகனோ? யானறிகின்றிலேன்; எங்ஙனம் இவனை வயிறு வாய்த்தனை?' என வியந்து வினவினர். எனப் பிள்ளையார் தோன்றிய கதை கூறப்படுகின்றது, புராணங்க ளனைத்தும் மெய்பாலுருவமைந்தவைகள் தாம் என்னும் அறிஞர்காள்! இக்கதையினால் யாது பயன்? உள்ளுறைப் பொருளாகவுள்ள சிறந்த தத்துவந்தான் என்ன? அட,

உலகெலாமீன்ற கன்னியாகிய 'விமலை' யின் உடம்பில் சிறிது நீண்டியவுடனே பெரிய பிள்ளையாராகத் தக்க அத்தனை அழுக்குத் திரளை தோன்றுமேயோ? அவ்வழுக் குயிர் பெற்றுப் பிள்ளையாராகிக் காவல் புரிந்து நிற்க, எல்லாமொருங்குணரும் (சர்வக்ஞன்) ஆண்டவன் தமது மனைவி நீராடப்புக்க தறியாமல் தேடிவந்ததும், பிள்ளையாரைத் தமது மகவென அறியாது கோறல்செய்ததும், அம்மை நீராடுமிடத்திற்குச் செல்ல முற்பட்டதும், தம்மை யறியாது மகவு பெற்றதென் என வினவியதும் சாலுமோ? சிவபெருமான துயர்வு சாற்றவந்த புராணம் இக்கதையையோ கூறித் தன் கருத்தை நிரப்பிற்று? உற்று நினையுங்கள். இச்சமயத்தை இழிவுறுத்தக் கெட்ட எண்ணத்தோடு எவனோ ஒரு புரட்டன் எழுதி வைத்ததென உண்மைச் சைவப் பற்றுடையார் பலரும் துணிந்துரைப்பார்களே! இன்னும் இத்தகைப் பொய் பொதிந்த அருவருப்புக் குரிய கதைகளைக் கூறும் புராணங்கள் பல வுள்ளனவாமன்றோ! ஆகலின் பெரியோர்களே! புராணங்களில் உயரிய தத்துவங்களை அறவொழுக்கங்களை அரும்பெரும் கருத்துக்களை உணர்த்தும் பகுதிகளை வேறு பிரித்துக்கொண்டு பொய்யும் வம்பும் நிறைந்த குப்பைகளைத் தூற்றிவிடல் வேண்டியதே. கற்றுவல்ல பல புலவர்கள் கூடிய ஒரு சங்கத்தே புராணங்களை விரித்து அவற்றின் நல்லனவும் தீயனவும் தெரிய வுணர்ந்து விழுமியவற்றைப் பொன்போற் போற்றிப் பிறவற்றை ஒழித்தல் தக்கதேயாம். பொய்படும் புராணக் குப்பைகளானே முற்றும் வாய்மை நிறைந்த பெரிய புராணம் போன்ற பல சிறந்தவைகளும் மதிப்புக் குன்றுவன வாகின்றன. இது நிற்க மற்றொரு கடப்பாடும் நாம் ஆற்றல் வேண்டும். சமயங்களின் அடிப்படையான உண்மைத் தத்துவங்களைத் தனியே எடுத்து அவ்வச் சமயிகளுக்கு விளக்கவேண்டும். புராணங்களே சமய நூற்களாகா. புராணங்கள் உயர்வு நவிற்சி என்னும் அணியின்பாற்பட்டுச் சமய உண்மைகளில் யாதேனுமொன்றைக் குறிக்கொண்டு அணுவை மலையாகப் புனைந்து கூறுவனவாய் அறிவு நிரம்பாத ஆதர்கட்குதவுவன. கலைநூல்வல்ல கூர்த்த அறிவினர் அவற்றைப் பொருளாக வையார். சமய நூற்களைத் துருவிச் சேர்வர். எங்கும் நிறைந்து எல்லாம் அறியும் முழு

ஆற்றல் படைத்தானோர் பரம்பொருள் உளன். உயிர்க்குலங்கள் அவனருளாற் படைத்த உலகங்களில் நின்று நிலவி அவனை நினைந்து கனிந்த அன்பு மேற்கொண்டு ஏனை உயிர்களையும் தம்மோடொப்பக் கருதித் தம்மாலியன்ற உதவிகளை அவைகட்கு மருது செய்து நன்னெறிபற்றி ஒழுகி வீடுபேறெய்துவன. உள்ளும் புறமும் ஒத் திருப்பதே தூயவறம். ஆகுல நீர பிற. எவரெவர் எச்சமயம்பற்றி ஒழுகுவாரேனும் அவ்வச் சமயங்களும் அவன் திருவருள்பெற் றுய்வதற்கு அவரவர் தகுதிக் கேற்ப அமைந்திருத்தலின் அவ் வெல்லாநெறிகளும் ஒருபுடை யொத்தவைகளே, சேய்மைக்கண்ண தாகிய ஒரூரை யணுக நெடுந்தூரம் சென்று னொருவனும், சிறிது வழிச் சேர்ந்தானொருவனும் போலச் சமயங்களின் பொருள் ஏற் றத் தாழ்ச்சிக் கேற்ப வேறுபடினும் நாளாவட்டத்தில் மேன்மே லுண்மை விளங்கும் தகவினால் அவை ஒரு பொருள் நுதலியவை களே. எச்சாதியாராயினும் உண்மை நெறியில் உயிர்கட்கிரங்கி நல் லொழுக்கம் நாடுவார்களாயின் அவர்கள் உயர்வுடைய மரபினரே. ஒழுக்கம் விடுத்து நான் பிறந்த குல நலத்தால் உயர்வேன் என் பவன் மிகவும் கீழ்ச்சாதியனே. இஃதே பண்டைப் பெரியோர் உட் கோளாம்.

நமது நரை மூதாட்டியாகிய **ஒளவையாரும்,**

சாதி யிரண்டொழிய வேறில்லை சாற்றுங்கால்
நீதி வழுவா நெறிமுறையின்—மேதினியில்
இட்டார் பெரிய ரிடாதா ரிழிகுலத்தோர்
பட்டாங்கி லுள்ள படி.

எனப் பாடினர்.

பட்டாங்கில் அதாவது பழைய உண்மை நூல் வழக்கில் உள்ள வாறு ஈதென வுணர்த்தியவாற்றால் ஏனைச் சாதி குலம் அனைத்தும் பிற்காலத்து ஆக்கிய கற்பனைகளென்பது பெறும். இதனாலே எல் லாச்சாதியினரும் தம் ஒழுக்கங்களையோ சீலங்களையோ கைவிட வேண்டுமென்று கூறினமல்லேம், அவரவர் தொன்மை முறையின் வந்தவாறு தத்தம் சீலங்களையோ ஏனைச் சடங்குகளையோ செய்து வருக. யாம் பெரியேம் உயர்குலத்தேம்; பிறர் சிறியார் தாழ்குலத்

தோர் என்னும் ஆணவப் பேயின் மாயத்திற் படாதொழிதற்பாலர். ஆங்கே, தம் சமயமே தலைசிறந்தது. பிறவனைத்தும் மிகத் தாழ்ந்தது எனக் கூறலும் தவறுபாடுடைத்தாம். ஒன்றே கடவுள் எனின் அக்கடவுளை வேறு பேர் கூறி வேறு நெறி ஒழுகும் அவரோடு முரணுதல் வழக்கன்றே. கடவுளை இல்லையென்றுரைக்கும் நாத்திகர் இருக்குமிடம் நண்ணுதகலல் தக்கது. பண்டைத் தவம் பற்றிக் கடவுளை நம்பி ஒழுகும் ஒழுக்கம் அவர்கள் சொற்கேட்பின் தம் சிற்றுணர்வு ஐயமுற்றுப் பிறழ்ந்து பிழைபடுமாதலின், மற்று அந்நாத்திகரையும் குறை கூறல் அடாது. அவர் அறிவு முகந்த அத்துணையே அவர் கூறுதலியல்பே யன்றோ? இன்று நாத்திகம் புக்கானொருவன் அந்நிலையினின்று ஆத்திகத்திற்கேவருவன். என்னை? நாத்திகத்தினும் கீழ்ப்பட்ட சமயம் ஒன்றின்றாகலின், ஆகவே அவரும் பின்னர் உண்மை காண்டற்குரியாரென்றே அவர் மாட்டும் அன்பு செய்தல் அறிஞர் கடன். நாம் மேற் கூறியவாறு புராணங்களின் பொய் கடிந்து, மெய்ந்நிறுத்தியும் சமயங்களின் ஆணித்தரக் கொள்கைகளை விளக்கியும், நாம் முயற்சியோடு முந்துதற்கு ஆத்திரமுண்டாக்கி வழிகாட்டலின், இச்சுயமரியாதை இயக்கத்துணைவர்கள் நமக்கு நன்றி புரியவந்த நல்லோரெனவே கருதவேண்டும் என்பதே இக்கட்டுரையின் முடிந்த முடிபாம், அத்துணைவர்கள் சற்று அமைந்த மனத்தினராக இருந்து தாம் ஏற்ற அரும் பெருஞ் செயலைக் காலமும் இடமும் தகுதியும் அறிந்தியற்றியும், கொண்டதே கோட்பாடெனப் பிடிவாதம் செய்யாது உண்மையை ஆரத்தீர வுணர்ந்து கடப்பாடு புரிந்தும், புராணங்கள் தாம் சமய நூற்களெனும் பொக்க நெறி புகுதாது, அவற்றின் வேறாய் முழு உண்மைப் பழக்க வழித்தாய்ப் பெரியோர் சென்ற தொன்னெறியே சமய நன்னெறி என வுணர்ந்தும் நீடு வாழ்வார்களாக.

நையாண்டி

[திருக் "கபசம்" அவர்கள்]

கடற்கரையில் என்னுடன் பேசிக் கொண்டிருந்தவர்களிடம் விடை பெற்றுக்கொண்டு நான் வீட்டிற்குப் புறப்பட்டேன். வரு

கிறவழியில் ஒரு சவுக்குத்தோப்பு இருந்தது, அதன் அருகில் இரண்டு மனிதர் ஒரு துணியை விரித்து அதன்மேல் எதிர்முகமாய் உட்கார்ந்திருந்தனர், இவர்களைப் பார்த்தவுடன் எனக்குச் சிறிது சிரிப்புண்டாயிற்று. ஏனெனின் ஒருவன் தேகத்துக்கும் தலைக் கும் இடையே கழுத்தே இல்லை என்று சொல்லும்படி அவ்வளவு பருத்தவனாயிருந்தான். மற்றொருவன் நீண்டுவளர்ந்து மெலிந்து முதுகில் வளைவுடையவனாய் ஒட்டகம்போலிருந்தான். இவன் விற குச் சுள்ளி போன்ற சுடுகாட்டுச் சுருட்டு ஒன்றை வாயில்வைத்துக் கொண்டு, கன்னங்களில் குழி விழும்படி புகையை உள்ளே இழுத் தான். இவர்கள் என்ன பேசுகிறார்கள் பார்ப்போம் என்று நான் அவ்விடத்தில் நின்றேன். யானைபோலிருந்தவன் ஒட்டகம்போன்ற வனை நோக்கிக் "கடவுள் இருக்கிறாரா, இல்லையா? அதைச் சொல்லு" என்றான்.

"கடவுள் இல்லை இன்னு எவன் ஐயா சொல்லுவான்? கட வுள் இருக்கிறார்" என்றான் ஒட்டையன்,

"அப்போ, அவர் கருப்பாயிருக்கிறாரா, செவப்பாயிருக்கி றாரா?"

"பாதிப்பேர் கருப்பாயிருக்கிறார் இன்றாங்க, பாதிப்பேர் செவப்பாயிருக்கிறார் இன்றாங்க"

"கருப்பாயிருக்கிறார் இன்றவங்க யாரையா?"

"கருப்பாயிருக்கிறார் இன்றவங்க வைஷ்ணவர், செவப்பாயிருக் கிறார் இன்றவங்க சைவர்."

"ஆமா, ஐயா, நீ சொல்றது சரி; இத்தினி நாளா அது எனக் குத் தெரியல. அடடே, நல்லா சொன்ன, ஐயா."

"இன்னும் ஒண்ணு பார்த்தியா? கருப்புச் சாமிக்குச் செவப் புப் பெண்டாட்டி செவப்புச் சாமிக்குக் கருப்புப் பெண்டாட்டி,"

"ஆமா, ஐயா, ஆமா, பேஷ்; ஒண்ணு சொன்னாலும் நல்லா சொல்ற. இதெல்லாம் எங்கே படிச்சுக்கின்னா?"

"படிக்கல, இதெல்லாம் படிச்சி வருறதா, ஐயா?"

இந்தச் சம்பாஷணையைக் கேட்ட எனக்கு ஒருபுறம் வியப்பும் மறுபுறம் சிரிப்பும் வந்தது. இவர்களுடன் சேர்ந்துகொண்டு பேசலாமா என்று யோசித்தேன். ஆனால் நேர மதிகமாகி விட்டதால் அவர்களோடு நான் கலந்து கொள்ளவில்லை.

நான் வீட்டிற்குப் போகும் வழியில் அகலவழி என்று பொருள்படும் பிராட்வேயைக் கடந்து செல்லவேண்டியிருந்தது. இங்கே நாட்டுக் கழுதைகள் போல் கத்துகின்ற மோட்டார் வண்டிகள் சரேல்; சரேல் என்று பாய்ந்துகொண்டிருந்தன. ஆகையால் அகல வழி என்று பெயர் பெற்ற நெருக்க வழியின் முனையில் கொஞ்ச நேரம் நின்றுகொண்டிருந்தேன். அங்கே இரண்டுபேர் ஒருவரை யொருவர் சந்தித்தனர். ஒருவன் மற்றொருவனை நோக்கி "ரொம்ப நாளேச்சே ஒன்னைப்பார்த்து; இப்ப எங்க இருக்கிற" என்று கேட்டான்.

"நான் மண்ணடியிலிருக்கிறேன்" என்று மற்றவன் பதில் உரைத்தான். உடனே நான் அவனிடஞ் சென்று, "ஐயா, நமஸ்காரம்; தங்களைப்போன்ற மகாத்மாக்கள் இக்காலத்தில் இருப்பார்கள் என்று நான் கனவிலும் நினைத்ததே கிடையாது. பூர்வ புண்ணிய வசத்தால்தான் இன்று தங்களைக் காணும் பாக்கியத்தைப் பெற்றேன்போலிருக்கிறது. தாங்கள் எப்படி மண்ணடியிலிருந்து வெளியே வந்தீர்கள்? தங்களை எப்பொழுது புதைத்தார்கள்?" என்று கைகூப்பி மிக வணக்கத்துடன் வினவினேன், அவன் என்னை ஏற இறங்கப்பார்த்து, 'சரிதான், வாயை மூடிக்கினு போய்யா' என்றான், அவனுடைய முகத்தைப்பார்த்தால், அவன் என்னைக் கடித்துத் தின்று விடுவான் போலிருந்தது. 'அடிபட்டாலுங் கடிபடலாகாது' என்பது என்னுடைய கொள்கை யாதலால் மோட்டார் வண்டிகளின் ஆபத்தையும் பாராமல் அவசரமாய் அவ்விடம்விட்டுப் பெயர்ந்து மேலே நடந்தேன். ஐந்தாறு கஜம் நடப்பதற்குமுன், குடித்து மயங்கிய இருவர் என்முன் எதிர்ப்பட்டனர், ஒருவன் தளர்ந்து தள்ளாடி நடந்தான்; மற்றவன் நேராய் நிமிர்ந்து, ஒழுங்காய் நடந்தான். ஒழுங்காய் நடந்தவன் தன் நண்பனைப்

பார்த்து, என்னுடா, முக்கா துட்டுக்கள்ளு குடிச்சிட்டு மூணு துட்டு ஆட்டம் ஆடுற; என்னப்பாரு, என்னு நிதானமா நடந்துப்போறேன்? என்னு குடிச்சாலும் நிதானத்த விடமாட்டேன்" என்றான். தள்ளாடி நடந்தவன் என்னை நோக்கி, "ஐயா, நீ சொல்லு, நான் நடக்கிறதில் என்னமாவது பெசகு இருக்குதா சொல்லு" என்றான், நான் கொஞ்சநேரம் யோசித்துவிட்டு "உங்களைப் பார்த்தால் பெருங்குடி மக்களைப்போலிருக்கிறது. நீங்கள் என்ன பிசகு செய்யப்போகிறீர்கள்?" என்று நகைத்துக்கொண்டு சொன்னேன், "பேஷ் நல்லா சொன்னே, நீ சொன்ன ஒரு வார்த்தைக்கி ஒரு ஆயிரம் கொடுக்கணும்" என்று அவன் சொல்லி என்னைக் கட்டிப் பிடிக்க வந்தான். நான் பயந்து விலகி "அப்பா, பெருங்குடியா, என்னைத் தொடவேண்டாம்" என்று மொழிந்து தப்பிக்கொண்டு அப்பாற் சென்றேன். நான் கூறியது அவன் செவியிற்பட்டவுடன் அவன் ஓ வென்று கூவி, "அட, பாவி, என்னைக் குடிகாரன் இன்னு சொல்றயே, நீ நல்லாயிருப்பியா?" என்று அழுது ஒப்பாரி வைக்கலானான். இதைக் கண்ட அவனுடைய நண்பன் தானும் சிணுங்கியழுதுகொண்டு "அழாத அப்பா, நம்ம கெதி இப்படி இருக்குது" என்று பரிதாபமாகப் பேசி அவனுடைய கண்ணீரைத் துடைத்தான். நமது நாட்டுக்குக் குடி அரசு வேண்டுகின்றவர்கள் இதைச் சிறிது சிந்திப்பார்களாக!

உண்மை காணல்

[திரு அ. சிதம்பரநாதனவர்கள், B. A.]

எழுத்துக்களெல்லாம் அகரமாகிய முதலையுடையன. அதுபோல உலகமும் உலகிலுள்ள உயிர்களும் கடவுளை முதலாகவுடையன எனக் கூறுப. கடவுளை முதலாகவுடைய இவ்வுலகத்திலுள்ள பொருள்களெல்லாம் அவ்வுண்மையை நிலைநாட்டும் என்ப. வித்திலிருந்து மரந்தோன்றியதா மரத்தினின்று வித்து தோன்றியதா என்ற ஐயம் நிகழ்ந்துழி, ஒன்றிலிருந்து மற்றொன்று தோன்றுவ துண்மையே யாயினும் முதன் முதலில் அவ்விரண்டனு ளொன்று கடவுளாற் படைக்கப் பட்

நிறைந்த திங்கட்போன்றார் கேண்மையை விரும்பின், அது நாளும் வரிசை வரிசையாக நந்தும்."

இன்ன ரினையரெமர் பிறர் நல்லார் அல்லார் எனப்பாராது யாவர்க்கும் பயன்றரு மாரி "வேற்றுமை பாராட்டாது யாவர்க்கு மீயக்கடவாய்" என்றும், "யாதொரு கைம்மாறு கருதாது செய்யப்படு நன்றியே தலை சிறந்தது" என்றும் கூறுவதாகக் கொள்க. உலகைப் புரக்கு மாரி உலகிடமிருந்து யாதாமொரு பயனும் எதிர்நோக்கி நிற்பதொன்றல்ல வென்பது யாரு மறிந்ததே. பலதுளிகள் பெருவெள்ளமாவதே போன்று பல காசுகள் பெருங்குவியலாகி விடும். சிறுகாசுதானே என்று நினைத்திகழாது போற்றப் படுமாயின் அக்காசும் பெரும்பொருளைச் சேர்த்து விடும். சிறுகாசாற் பிறர்க்குச் செய்யப்படு நன்றி பெரிதன்றே என்று நினைக்கப்படாது. பிறர்க்கது வுதவப்படுமேயாயின், அதைப்போன்று செய்யப்படும் பல நன்றிகள் கூடிப் பெரும்பயன் கூட்டி நிற்குமெனக் கொள்க. உலகிலுள்ள உயிர்களெல்லாம் மாரியாகிய உணவை நோக்கி வாழ்வது போல நாட்டிலுள்ள குடிகளெல்லாம், செங்கோலாகிய ஏமத்தை நோக்கி வாழ்கிறு ராதலின் மன்னவன் செங்கோலனாக விருக்கக் கடவன். மழையில்லாமை உலகிற் கெவ்வளவு பீழையும் பகையுந் தருமோ அவ்வளவு வேந்த னருளில்லாமை குடிகளுக்குத் துன்பமுந் துயருந் தரும். மழையில்லாவிடின் எவ்வாறுயிர்கள் வாடி வருத்த முறுகின்றனவோ அவ்வாறே மன்னவன் அருளில்லாக்கால் குடிகள் வாட்டமுற்று வருந்துவர். மழை உலகைப் புறந்தருத லில்லையாயின் ஆன்கள் பாலிற் குன்றும்; ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல் என்ற அறு தொழிலுடையோரும் அவரவர் நூல்களிற் கற்றவற்றை மறந்து எழில் குன்றிப் பசியுற்று நிற்பர். அதுபோலக் காவலன் செங்கோலோச்சித் தன்குடிகளைக் காவானாயின், அவனாட்டு ஆநிரைகளை வேற்றுப்புலத்தோ ரடித்துக் கொண்டு போவார். அதனால், வேற்றுப்புலஞ்சேர்ந்த பசுக்களின் பால் குன்றும். அன்றியும், வேந்தனது காப்பில்லாமையால் அவனாட்டிலுள்ள ஆன்கள் வேற்றுப்புலங் கொண்டு

போகப் படுவதால் அவனாட்டுள்ள ஆன்கள் குறைவுபடும். அதனால் ஆபயனுங் குன்றும். குடிபுறந்தரூஉஞ் செங்கோல னில்லாக்கால் குடிகளும் தத்தந்தொழிலை ஒழுங்குறச்செய்யார். ஆகலின், யாண்டும் மன்னவன் செங்கோல் நடாத்திக் குடிகளைப் பேணுவானாக என்று மாரி குறிப்பிடுவதாகக் கொள்க.

சிறிவிழும் அலைகள் நிறைந்த கடல் நமக்குக் கூறுவன பலவுள. அவற்றுட்சிலவே பின்வருவன:— "என்னிட மொலிக்கும் அலைகளொழிந்த பின் நீராடலாமென நினைத்து நீராடாது நிற்கும் மனிதரைப்போன்று நீவிரும் குடும்பக்கவலைகள் ஒழிந்தபின் அறமியற்றலா மென நிற்பீரேல், உமதெண்ணம் நிறைவெய்தாது. அலைகள் என்னை யலைக்காம லொழியப் போவதுமில்லை. உமது குடும்பக்கவலைகள் உம்மைக்கொள்ளாது விடப்போவது மில்லை. ஆதலால், இன்றே, இன்னு மின்னே அறஞ்செய்வீராக. பொருளுடையீர்! அளவிலு மாழத்திலும் நான் பெரியவனாக மதிக்கப்படினும் எழிலியென்னிடமிருந்து நீரை முகந்து சென்று உலகிற்குதவாதாயின், என்னீர்மை குன்றிவிடுவேன். அதுபோல நீவிர் ஆக்கமிக்குடையீராயினும் அவ்வாக்கத்தைப் பெருக்கும் பொருட்டு அறவழியிற்செலவு செய்யாதிருப்பீரேயாகில், உமது ஆக்கத்திற் குன்றுவீர். என்னிடத்தே படுமுத்துக்களை யணிந்து இன்புறுபவன் நானல்ல. உம்மிடமிருந்து தோன்றும் பெண்களும் உமக்காகார். அவ்வாறிருக்க உம்மால் பெறப்பட்ட பொருள்களெல்லாம் உமக்கேயுரியது என்று நினைத்திருப்ப தென்னை? அவற்றைப் பிறர்க்கேன் உதவக்கூடாது?" என்ன கேள்விகள்! என்ன அறிவுரைகள்!! என்ன அறவுரைகள்!!! பாருங்கள்.

(தொடரும்)

திருவள்ளுவரும் ஆண்பெண் ஒற்றுமைத் தொடர்பு நிலையும் *

[திரு. மா. வே. நெல்லையப்ப பிள்ளையவர்கள், B. A.]

முகவுரை

திருக்குறள் நூலை இயற்றிய திருவள்ளுவர் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னே நமது தமிழ் நாட்டில் வாழ்ந்து வந்தவர். அவர் தமிழர். அந்தக் காலத்திலே தமிழ் நாட்டிற்கு ஆரியர்கள் வந்து நீண்ட காலமாய் விட்டது. ஆதலின் அப்பொழுது அவர்கள் நாகரீகம் தமிழ் நாட்டிற் கலந்திருந்தது. ஆரியர்களது நாகரீகங் கலந்திருந்தாலும் திருவள்ளுவர் பெரும்பான்மை தமிழர் நாகரீகக் கருத்துக்களையே அடிப்படையாகக் கொண்டு நூலை எழுதி யிருக்கிறார். ஆரியர் நாகரீகக் கருத்தும் அரிதாய் ஒவ்வோரிடத்தில் மொழியப்பட்டிருக்கின்றது. திருக்குறள் நூலில் ஆராய்ச்சிக்கு உரிய பொருள்கள் பல இருக்கின்றன. அவற்றில் ஆண்பெண் ஒற்றுமைத் தொடர்பு நிலை ஒன்று. இறந்தொழிந்த பண்டைத் தமிழ் நூல்கள் போக இப்பொழுது கிடைக்கும் நூல்களைப் படித்துத் தமிழ் முன்னோர்களது நாகரீகம் அறியாத சிலர் தாங்கள் படித்தறிந்த ஐரோப்பிய நாகரீகங்களைக் கொண்டு திருக்குறளில் கூறி யிருக்கின்ற ஆண்பெண் தொடர்பு நிலை (Sex relation) யைப் படித்து அதனை இகழ்ந்து பேசுகிறார்கள். அவர்கள் அவ்வாறு பேசுதல் உண்மையை அறிதற்கேற்ற முறை அல்ல என்பதை நான் அறிந்தவரை விளக்குதலே இச்சொற் பொழிவின் கருத்தாம்.

2. நேற்றுத் திருக்குறட் டிறவுகோல் என்னும் பொருள் பற்றிப் பேசிய நண்பர் திருவாளர் பொ. திருகூட சுந்தரம்

---

* இப்பொருள் பற்றிச் சிந்துபூந்துறை அறத்திரு நெறிக்கழகம் இரண்டாவது ஆண்டு நிறைவு விழாக் கூட்டத்தில் நிகழும் பிப்ரவரித் திங்கள் 17-ம் நாள் ஞாயிற்றுக்கிழமை மாலை எழுதி வாசிக்கப்பட்டது.

பிள்ளை அவர்கள் நான் போகும் வழியில் சில முட்டுக்கட்டைகளை வைத்து விட்டார்கள். அவற்றில் சில முட்டுக் கட்டைகளைத் தலைவர் அவர்கள் தாங்கள் கூறிய உரையால் எடுத்து விட்டார்கள். ஒரு பெரிய முட்டுக் கட்டையைப்பற்றிப் பேசி அதனை எடுத்து விலக்காவிட்டால் என் பாதை சீராகாது. ஆதலின் நான் அதனைப்பற்றிப்பேசுதல் இன்றி அமையாதது. அவர்கள் சொன்னதாவன:—திருவள்ளுவர் நம்மைப்போன்ற ஒரு மனிதரன்றித் திருவள்ளுவ மாலைப்பாக்களிற் கூறியபடி திறமை வாய்ந்தவர் என்று நம்பி நாம் அதனைப் படிக்கக்கூடாது. இக்காலத்துக்கேற்ற கருத்துக்களைக் கூறியுள்ள குறள்களை ஆராய்ச்சிமுறையில் எடுத்துக் கொண்டு ஏனைய குறள்களை எடுத்துவிடல் வேண்டும். எடுத்துக் காட்டாக வாய்மை என்னும் அதிகாரத்தில் முதலாவது குறளை அவர்கள் எடுத்துக்கூறி அது சரியான கருத்துடையதல்ல என்று பேசினார்கள். வேறு சில குறள்களையும் பற்றி அவர்கள் அவ்வாறு பேசினார்கள். அதற்கு நான் சுருக்கமாக மறுமொழி கூறுவன அடியில் வருவன. யார் எக்கருத்துச் சொன்னாலும் நாம் அதனை அப்படியே நம்பாமல் அதன் உண்மையை ஆராய்ச்சி முறையில் ஆராய்ந்து அறிதலே தக்கது; அதுவே தமிழ் முன்னோர்களுடைய முறை. ஆனால் திருவள்ளுவரானவர் நம்மைப்போல் காமம் வெகுளி மயக்கங்களில் ஈடுபட்டுழல்கின்ற மக்களில் ஒருவர் என்று எண்ணுதல் முற்றிலுந் தவறு. அவர் மெய்யுணர்வு அடைந்தவர் என்பது அவர் முதலாவது அதிகாரத்திலும், நிலையாமை அவாவறுத்தல் துறவு மெய்யுணர்வு என்ற நாலு அதிகாரங்களிலும் கூறிய கருத்துக்களினால் சிறப்பாக நன்கு விளங்கும். அவரை மயக்க அறிவு உடையவராகக் கருதினால் நாம் ஏன் அதனைப் படித்தல் வேண்டும்? யாதாமொரு குறளினது கருத்து நமக்கு நன்கு விளங்க வில்லையானால் நாம் தற்பெருமிதமின்றி அறிந்தார்வாயிற் கேட்டுக்கேட்ட பொருளை மனதில் நன்கு சிந்தித்தல் வேண்டும்; உடனே விளங்க வில்லையானால் பன்முறை சிந்தித்தல் வேண்டும்; அப்படிச் சிந்தித்தும் நமக்கு விளங்க வில்லையானால் நமது அறிவுக்

குறைவால் விளங்கவில்லை; பின்னுல் நாம் அதனை அறிதல் கூடும் என்று நினைத்தல் வேண்டும். மனத் தூய்மையுடன் உண்மையைச் சிந்தித்தறியும் வன்மையினுலேயே மயக்க அறிவு நீங்கித் தெள்ளறிவு (Intention) உண்டாகும். இந்த முறையிலன்றி நாம் ஒவ்வொருவரும் நமது மயக்க அறிவுக்குப் பொருந்திய குறள்களை மாத்திரம் வைத்துக்கொண்டு ஏனைய குறள்களை விலக்கி விடுவோமாளுல் முடிவில் புத்தகத்துக்கு இருபுறங்களிலுமுள்ள அட்டைகள்தான் மிஞ்சும்.

3. இனி நான் எடுத்துக்கொண்ட பொருளைப்பற்றிப் பேசத் தொடங்குகின்றேன். ஆண் பெண் ஒற்றுமை(த் தொடர்பு) நிலை என்பது சுருங்கக் கூறின் ஆண்மக்களும் பெண்மக்களும் உலக வாழ்வில் ஒன்றுபட்ட தொடர்பு உடையவர்களாய் உயிர் வாழ்ந்து நிற்கும் நிலை எனப் பொருள்படும். ஆண்மக்களுக்கும் பெண்மக்களுக்குமுள்ள தொடர்பு இயற்கையில் அமைந்துள்ள தொடர்பு. அவர்கள் ஒருவருக்கொருவர் உதவியாயிருந்து வாழ்க்கை வாழவேண்டியவர்கள். ஆண்மக்களும் பெண்மக்களும் ஒன்றுபட்டு வாழ்ந்தாலன்றி உலகவாழ்வு எத்திறத்தினும் நடைபெருது. ஆணுயினும் பெண்ணுயினும் அவர்கள் தனித்த நிலையே பாதியே ஆவார்கள். அவர்களிருவருஞ் சேர்ந்த நிலையில் மாத்திரம் முழுமையாவார்கள். இந்த உண்மையை நமது சமயநூல்களும் பண்டைத் தமிழ் இலக்கண இலக்கிய நூல்களும் விளக்கிக் கூறுகின்றன. டேனிஷன் முதலிய ஆங்கிலக் கவிஞர்களும் இவ்வுண்மையைக் கூறியிருக்கின்ருர்கள். ஆனுல் இது ஐரோப்பியர்களுடைய நடைமுறைவாழ்க்கையில் நமது தமிழ் முன்னேர்களுடைய நடைமுறை வாழ்க்கையிற்போல விளங்கவில்லை. பொதுவாகக் கூறின் ஐரோப்பியர்களுக்குள் ஆண்பெண் மணமானது உலகப் பயனைப்பற்றியுள்ளது என்றும், தமிழர்களுக்குள் உலகவாழ்வின் பயனுகிய வீடுபேற்றைப் பற்றியுள்ளது என்றும் நாம் கூறலாம். ஆணும் பெண்ணும் சேர்ந்து வாழும் வாழ்வே முழுமையாகும் என்ருல் ஒவ்வொருவருக்கும் தனித்தனியே வெவ்வேறு பண்புகள் உள என்று பெறப்படுகின்றது. அவ்விருவகைப் பண்புகள் யாவை?

ஒருவகைப் பண்புகளுக்கும் மற்றொருவகைப் பண்புகளுக்கு முள்ள தொடர்புகள் யாவை? அத்தொடர்புபற்றி அவ்விரு வகைப் பண்புகளும் வாழ்வு நடைமுறையில் எவ்வாறு ஒற்றித்து வாழ்வுக்குப் பயன்படுகின்றன என்பனவே நான் எடுத்துக்கொண்ட ஆராய்ச்சியாகும்.

4. திருவள்ளுவர் திருக்குறளில் ஆராய்ச்சி செய்யப்படும் பொருள்கள் பலவுள. அப்பொருள்களில் ஆண்பெண் தொடர்பு நிலை (sex relation) ஒன்று. திருக்குறள் ஆராய்ச்சி யாளர்கள் இதுவரை இப்பொருளைப்பற்றி நன்கு ஆராய்ச்சி செய்ததாக எனக்குத் தெரியவில்லை. இதைப்பற்றி அறிவுடையார்கள் ஒன்று பட்ட கருத்துடையவர்களல்லர். மேலை நாட்டுத் தற்கால அறிஞர்களும் கீழை நாட்டுத் தமிழ் முன்னோர்களும் எதிரிட்ட கருத்துடையவர்கள். தமிழ் நூல்களில் மிக்க பயிற்சியின்றி ஆங்கிலங்கற்ற தமிழ் நாட்டு அறிஞர்களும் மேலை நாட்டு அறிஞர்களுடைய கருத்தினது சார்பாகவே பேசுகின்றார்கள். நுண்ணுள்ளங் கொண்டு செய்யப் படும் ஆராய்ச்சியினாலேயே உண்மை இன்னது என்று வெளிப்பட வேண்டும். இப்பொழுது சுருங்கிய நேரத்தில் இப்பொருளைப்பற்றி ஆராய்ச்சி செய்து முடித்து விடுதல் என்னுடைய கருத்தல்ல. நான் அதற்கு எவ்வகையிலும், போதிய ஆற்றலுடையவன் அல்லன். இப்பொருளைப்பற்றிச் சிறிது பேசி அதன் ஆராய்ச்சியைத் தூண்டி விடுதலே என்னுடைய கருத்தாகும்.

5. ஆண்பெண் தொடர்பு நிலையினை ஆராய்தற்கு அதற்குப் பற்றுக் கோடாயுள்ள சில பெருங் குறிநிலை உண்மைகளை நாம் மனதில் வைத்துக் கொள்ளல் வேண்டும்:—

1. திருக்குறளிற் கூறியபடி உலக வாழ்வின் பயனாகி அடையும் அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நான்கு உறுதிப் பொருள்களையும் மக்கள் அடைதற்கு ஏற்றவன்மை ஆண்பெண் தொடர்பு நிலையாலுளதாகிய இல்வாழ்க்கை அமைதல் வேண்டும்.

2. உலக வாழ்க்கை நடை முறையில் அறிவு வேட்கை (இச்சை) செயல்களாலே நிகழ்கின்றது. எத்துறை நடை முறையும் அறிவு வேட்கை செயல்களால் அன்றி நிகழாது. அறிவு

குறைவால் விளங்கவில்லை; பின்னால் நாம் அதனை அறிதல் கூடும் என்று நினைத்தல் வேண்டும். மனத் தூய்மையுடன் உண்மையைச் சிந்தித்தறியும் வன்மையினாலேயே மயக்க அறிவு நீங்கித் தெள்ளறிவு (Intention) உண்டாகும். இந்த முறையிலன்றி நாம் ஒவ்வொருவரும் நமது மயக்க அறிவுக்குப் பொருந்திய குறள்களை மாத்திரம் வைத்துக்கொண்டு ஏனைய குறள்களை விலக்கி விடுவோமானால் முடிவில் புத்தகத்துக்கு இருபுறங்களிலுமுள்ள அட்டைகள்தான் மிஞ்சும்.

3. இனி நான் எடுத்துக்கொண்ட பொருளைப்பற்றிப் பேசத் தொடங்குகின்றேன். ஆண் பெண் ஒற்றுமை(த் தொடர்பு) நிலை என்பது சுருங்கக் கூறின் ஆண்மக்களும் பெண்மக்களும் உலக வாழ்வில் ஒன்றுபட்ட தொடர்பு உடையவர்களாய் உயிர் வாழ்ந்து நிற்கும் நிலை எனப் பொருள்படும். ஆண்மக்களுக்கும் பெண்மக்களுக்குமுள்ள தொடர்பு இயற்கையில் அமைந்துள்ள தொடர்பு. அவர்கள் ஒருவருக்கொருவர் உதவியாயிருந்து வாழ்க்கை வாழவேண்டியவர்கள். ஆண்மக்களும் பெண்மக்களும் ஒன்றுபட்டு வாழ்ந்தாலன்றி உலகவாழ்வு எத்திறத்தினும் நடைபெறாது. ஆணாயினும் பெண்ணாயினும் அவர்கள் தனித்த நிலையே பாதியே ஆவார்கள். அவர்களிருவருஞ் சேர்ந்த நிலையில் மாத்திரம் முழுமையாவார்கள். இந்த உண்மையை நமது சமயநூல்களும் பண்டைத் தமிழ் இலக்கண இலக்கிய நூல்களும் விளக்கிக் கூறுகின்றன. டெனிஷன் முதலிய ஆங்கிலக் கவிஞர்களும் இவ்வுண்மையைக் கூறியிருக்கின்றார்கள். ஆனால் இது ஐரோப்பியர்களுடைய நடைமுறைவாழ்க்கையில் நமது தமிழ் முன்னோர்களுடைய நடைமுறை வாழ்க்கையிற்போல விளங்கவில்லை. பொதுவாகக் கூறின் ஐரோப்பியர்களுக்குள் ஆண்பெண் மணமானது உலகப் பயனைப்பற்றியுள்ளது என்றும், தமிழர்களுக்குள் உலகவாழ்வின் பயனாகிய வீடுபேற்றைப் பற்றியுள்ளது என்றும் நாம் கூறலாம். ஆணும் பெண்ணும் சேர்ந்து வாழும் வாழ்வே முழுமையாகும் என்றால் ஒவ்வொருவருக்கும் தனித்தனியே வெவ்வேறு பண்புகள் உள என்று பெறப்படுகின்றது. அவ்விருவகைப் பண்புகள் யாவை?

ஒருவகைப் பண்புகளுக்கும் மற்றொருவகைப் பண்புகளுக்கு முள்ள தொடர்புகள் யாவை? அத்தொடர்புபற்றி அவ்விரு வகைப் பண்புகளும் வாழ்வு நடைமுறையில் எவ்வாறு ஒற்றித்து வாழ்வுக்குப் பயன்படுகின்றன என்பனவே நான் எடுத்துக்கொண்ட ஆராய்ச்சியாகும்.

4. திருவள்ளுவர் திருக்குறளில் ஆராய்ச்சி செய்யப்படும் பொருள்கள் பலவுள. அப்பொருள்களில் ஆண்பெண் தொடர்பு நிலை (sex relation) ஒன்று. திருக்குறள் ஆராய்ச்சி யாளர்கள் இதுவரை இப்பொருளைப்பற்றி நன்கு ஆராய்ச்சி செய்ததாக எனக்குத் தெரியவில்லை. இதைப்பற்றி அறிவுடையார்கள் ஒன்று பட்ட கருத்துடையவர்களல்லர். மேலை நாட்டுத் தற்கால அறிஞர்களும் கீழை நாட்டுத் தமிழ் முன்னோர்களும் எதிரிட்ட கருத்துடையவர்கள். தமிழ் நூல்களில் மிக்க பயிற்சியின்றி ஆங்கிலங்கற்ற தமிழ் நாட்டு அறிஞர்களும் மேலை நாட்டு அறிஞர்களுடைய கருத்தினது சார்பாகவே பேசுகின்றார்கள். நுண்ணுள்ளங் கொண்டு செய்யப்படும் ஆராய்ச்சியினாலேயே உண்மை இன்னது என்று வெளிப்பட வேண்டும். இப்பொழுது சுருங்கிய நேரத்தில் இப்பொருளைப்பற்றி ஆராய்ச்சி செய்து முடித்து விடுதல் என்னுடைய கருத்தல்ல. நான் அதற்கு எவ்வகையிலும், போதிய ஆற்றலுடையவன் அல்லன். இப்பொருளைப்பற்றிச் சிறிது பேசி அதன் ஆராய்ச்சியைத் தூண்டி விடுதலே என்னுடைய கருத்தாகும்.

5. ஆண்பெண் தொடர்பு நிலையினை ஆராய்தற்கு அதற்குப் பற்றுக் கோடாயுள்ள சில பெருங் குறிநிலை உண்மைகளை நாம் மனதில் வைத்துக் கொள்ளல் வேண்டும்:—

1. திருக்குறளிற் கூறியபடி உலக வாழ்வின் பயனாக அடையும் அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நான்கு உறுதிப் பொருள்களையும் மக்கள் அடைதற்கு ஏற்றவன்மை ஆண்பெண் தொடர்பு நிலையானுளதாகிய இல்வாழ்க்கை அமைதல் வேண்டும்.

2. உலக வாழ்க்கை நடை முறையில் அறிவு வேட்கை (இச்சை) செயல்களாலே நிகழ்கின்றது. எத்துறை நடை முறையும் அறிவு வேட்கை செயல்களால் அன்றி நிகழாது. அறிவு

பெண் உணர்ச்சியில் அழுத்த முடையவளாயு மிருக்கிறார்கள். ஆண் தான் வெளியே சென்று பல மக்களுடன் தொடர்பு பட்டு வேலை செய்தலினால் பழக்கத்தில் மிக்க அறிவுடையவனாகின்றான். பெண் மனைக்குளிருந்து குழந்தைகளைப் பெற்று அவைகளது உதவி யற்ற நிலைமைக்கு இரங்கி அவைகளைப் பேணி வளர்க்குந் தன்மை யால் மிக்க உணர்ச்சி யுடையவளாகின்றாள். அதனால் பெண் உணர்ச்சியில் மிக்க பழக்கமுடையவளாய் அப் பழக்கத்தின் பய னாக அன்பு மிரக்கமு முடையவளாகின்றாள். இவ்வாறு ஆண் அறிவில் சிறப்புடையவனாய் விளங்குதலினால் மனவலி அல்லது மனத்திட்ப முடையவனாகின்றான். பெண் உணர்ச்சியில் சிறப் புடையவளாய் விளங்குதலினால் மன இளக்க முடையவளா கின்றாள்.

7. இனி ஆணுக்குரிய சிறப்புப் பண்புகளும் பெண்ணுக்குரிய சிறப்புப் பண்புகளும் எவ்வாறு தொடர்பு பட்டு உலக வாழ்க்கை நடை முறையில் பயன்படுகின்றன என்பது கருதுவாம். மனத்திட்பமானது வினை செய்தற்கு இன்றி அமையாது வேண்டப்படுவது. மனத்திட்ப மில்லாவிடின் வினைத்திட்பமும் உண்டாகாது. வினைத்திட்பமென்ப தொருவன் மனத்திட்பம் என்றார் **நாயனார்.** வினை செய்தலின் மன இளக்கமும் வேண்டப் படுவதுதான்; ஆனால் அது வினைக்கேடு உண்டாகாத அளவில் இருத்தல் வேண்டும். மன இளக்கம் அளவுக்கு மிஞ்சி யிருந்தால் வினைக்கேடு உண்டாகும். “கருமஞ் சிதையாமற் கண்ணோட வல்லார்க் குரிமை யுடைத்திவ் வுலகு” என்றார் நாயனார். பெண் இந்த அளவு அறிந்து இயற்கையில் மன இளக்கஞ் செய்ய முடியாதவளா யிருக்கிறாள். மனைக்கு வேண்டிய ஒரு வினை செய் தற்கண் ஆண் பெண்ணுடன் சேர்ந்து சூழ்ச்சி செய்தாலும் அதனை அறிந்து துணிவு செய்தற்கண் ஆணே ஆளுந்திறனையுடையவனா யிருந்து முடிவு செய்தல் வேண்டும். பெண் ஆளுந்திறனை யுடை யவளாயிருந்தால் வினை முடிவு பெறாது; மேலே பகுதி 5:உ-ல் கூறியபடி நற்பயனும் விளையாது. ஒரு இல்லின்கண் ஆணும் பெண்ணு முளராயிருப்ப யாதாமொருவர்தான் ஆளுந் தொழிலை யுடையவராயிருத்தல் வேண்டும்; இருவரு மதனையுடையராயிருந்

தால் வினைக்கேடு உண்டாகும். ஆதலின் மனத்திட்ப முடைய ஆண் ஆளுந்திறனுடையனாயும் மன இளக்கமுடைய பெண் அடங்கும் அல்லது ஆளப்படுந் திறனுடையவளாயு மிருத்தல் வேண்டும். இம்முறை மாறியிருந்தால் இல்வாழ்க்கை செவ்விதாக நடைபெறாது என்பது உலக வழக்கத்திலும் நாம் காணலாம். ஆண் மக்களிற் சிலர் தங்கள் மனையாளிடத்துப் பற்றியுள்ள காமத்திலீடுபட்டு மயங்கித் தங்கள் மனத்திட்ப மிடிந்து அவளுடைய ஏவல் வழி ஒழுகுகின்றார்கள். அப்பேர்ப்பட்ட பெண்ணேவல்வழி நிற்கிறவர்கள் தாங்கள் விரும்பியவண்ணம் விருந்தினர் உறவினருக்குத் தங்கள் மனையில் உணவளித்து முகமன் செய்ய முடியாதவர்களாயிருக்கிறார்கள். இச்சிறு வினையே அவர்கள் செய்ய முடியாததென்றால் வேறு என்ன பெரிய நல்வினை அவர்கள் செய்ய முடியும்? இதுபற்றி "அறவினையு மான்ற பொருளும் பிறவினையும் பெண்ணேவல் செய்வார்களில்" என்று நாயனார் கூறியருளினார்.

8. ஆண் ஆளுந்தகுதி யுடையவன் என்பதற்கு இன்னொரு காரணமுளது. பெண், உலகப் பொருள்களில் வேட்கை மிகுதி யுடையவள். மனத்திட்பங் குறைந்தவளாதலின் அவள் வேட்கை வழியே ஒழுகுவள் அறிவுகொண்டு வேட்கை மிகுதி தடுக்கப்படாவிட்டால் தீமை [illegible]யும். நகைப்பித்து பெண்ணுக்கே மிகுதியாக உள்ளது என்ப[illegible]ரும் அறிவார்கள். ஆதலின் பெண்ணினுடைய வேட்[illegible] மிகுதியைத் தடுப்பதற்கு ஆணுக்குக் குடி வாழ்க்கையில் ஆளுந்திறன் வேண்டப்படுவதாகும்.

9. மக்கள் சிலர் சேர்ந்துள்ள ஒரு குடி வாழ்க்கை ஒரு சிறிய உலக வாழ்க்கையாகின்றது. ஒரு சிறிய குடி வாழ்க்கையில் என்ன பண்புகள் பயிற்சி செய்யப்படுகின்றனவோ அப்பண்புகள் தான் உலகிலுள்ள மக்கட் கூட்ட வாழ்க்கையிலும் காணப்படும். மக்கட் பொதுக்கூட்ட வாழ்க்கைக்கு ஆளுந்தன்மையும் அடங்கும் தன்மையும் வேண்டப்படுவன. ஒரு குடிவாழ்க்கையில் அதற்குத் தலைவராயுள்ள ஒரு ஆண் மகனிடத்தில் ஆளுந் தன்மையும் ஆணையும் பெண்ணையுமுள்ள மற்றவர்களிடத்தில் ஆளப்படுந் தன்மையும் அல்லது அடங்குந் தன்மையும் பழக்கமாகுமானால் அப்பழக்கம் மக்கட் கூட்ட வாழ்கைக்கு மிக்க பயனுடைத்தாகும்.

10. இவ்வாறு ஆணுக்கு ஆளுமுரிமையும் பெண்ணுக்கு அடங்கு முரிமையும் உளவாயிருத்தலினால் மக்கள் பொதுவாக நினைக்கிறபடி ஆணுக்கு உயர்வும் பெண்ணுக்குத் தாழ்வும் உண்டாகா. தமிழர்களுக்குள் கணவனு மனையாளும் சேர்ந்தே முழுமையாகின்றார்கள். இருவருஞ் சேர்ந்து வாழ்கிற வாழ்க்கையே வாழ்க்கை ஒருமையாகின்றது (unit of life); ஐரோப்பியர் வாழ்க்கையிற்போல ஒவ்வொருவரும் வாழ்க்கை ஒருமையாகிற தில்லை. ஆணும் பெண்ணும் சேர்ந்த வாழ்க்கை வாழ்க்கை ஒருமையாகக் கருதப்பட்டால் மனதில் உயர்வு தாழ்வுக் கருத்துக் கள் உண்டாகமாட்டா.

11. திருவள்ளுவ நாயனார் தாம் அருளிச் செய்த திருக்குற ளில் தமிழ் முன்னோர்களுடைய நாகரிகக் கருத்துக்களைத் தழுவி ஆண்பெண் ஒற்றுமைத் தொடர்பு நிலையைக் கூறி யிருக்கின்றார். அக்கருத்துக்கள் அடங்கியுள்ள குறள்களை ஐரோப்பிய நாக ரீகத்தை மாத்திரம் தெரிந்துள்ளவர்கள் அறியப்புகின் அவைகளின் பொருள் அவர்களுக்கு நன்கு புலனாகாது. பண்டைத் தமிழ் நூல்களைக் கற்றுத் தமிழ் முன்னோர்களுடைய நாகரிகம் அறிந்த வர்களுக்கு அது புலனாகும்.

12. மேலே கூறிய தமிழ் முன்னோர்களுடைய நாகரீகக் கருத்துக்களை மனதில் வைத்துக் கொண்டால் அடியிற்கண்ட குறள்களின் பொருள் நன்கு விளங்கும்.

தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யு மழை.

இனம்போன் றினமல்லார் கேண்மை மகளிர்
மனம்போல வேறு படும்.

பெண்வழிச் சேறல் என்றும் அதிகாரக் குறள்கள் பத்தும் இவை போன்ற சில குறள்களும்.

பெருவாழ்வு *

[திரு. M. P. S. வேலாயுதம் பிள்ளையவர்கள்]

முயற்சியுள்ள வினையாளன் தடைகளால் தளர்வானல்லன். ஆனால் அவற்றை மேற்கொள்ளும் வழி எதுவென்பதையே நாட முனைகிறான். அஃதேபோல் உயர்நிலையடைய இடைவிடாது முயற்சி செய்வோனை, அவா அடக்கிவிடமுடியாது. ஆனால் அவன் தன் உளத்தினை எவ்வாறு காத்துக்கொள்வதென்றே ஆழ்ந்த நினைவி லிருக்கிறான். ஏனெனில் அவாவை மூட்டுவோன் ஓர் கோழையை யொப்பாவான். தளர்வும் நலிவும் ஏற்பட்டபோழ்துதான் அவன் முந்துறுகிறான். அவா மூட்டப்படுபவன் அவாவின் தன்மையையும் பொருளையுங் கூர்ந்து ஆராயவேண்டும். ஏனெனில் அதனை அறியும் வரை, அதனை மேற்கொள்ள முடியாது. அவாவினை மேற்கொள்ள விருப்பவன் அஃது எவ்வாறு அவன் அறிவீனத்திலும் தவறி லுமே வெளிப்படுகிறதென்பதை அறியவேண்டும். தன்னையே ஆராய்ந்தும், ஆழநினைந்தும் எவ்வாறு மடமையையகற்றி, உண்மை யொளியின் தவற்றைப் போக்குவதென்பதை உணர்ந்துகொளல் வேண்டும்.

உண்மையை யறிந்துகொள்ள வேண்டுமாயின், ஒருவன் தன் னையே அறிந்துகொளல்வேண்டும். தன்னையறிந்துகொளல் தன்னை வெற்றி கொள்ளுதற்கு வழி.

II

உயர்நிலையடையப் படிப்படியாய் மேலேறுவது, சிலவற்றைப் பின்னாகவும், கீழேயும் விட்டுப்போவதாம். தாழ்ந்ததை யொழித் தாற்றான் உயரியதை யடையமுடியும். தீமையை யகற்றிவிட்டாற் றான் நலத்தையடைதல்கூடும். அறியாமையை யழிக்கும்போதே அறிவையடையப்பெறுவது. நாம் பெறும் ஒவ்வொன்றுக்கும் விலை யுண்டு. விலையனைத்தையுங் கொடுத்தேயாகவேண்டும். ஒவ்வொரு

* ஜேம்ஸ் ஆலன் என்ற ஆங்கிலநாட்டுப் பெரியார் இயற்றிய அறி வுரைகளினின்றும் மொழிபெயர்க்கப்பட்டது.

விலங்கினமும், ஒவ்வொரு ஊர்ந்து செல்லும் சிற்றுயிரும் ஏதாவ தோர் சிறந்த குணத்தைப் பெற்றேயிருக்கின்றன. உயர்நிலே நாடிச் செல்லும் மகனே அதைவிடச் சிறந்த குணத்தையோ, அன்றி வலி மையையோ பெறுமாறு அதனை அவற்றிற்கு விட்டுவிடுகிருன். தன் னலப் பற்றுக்கொண்ட வழக்கங்களைப் பற்றி நிற்பதால் மக்கள் பெரும் நலங்களையெல்லா மிழந்துவிடுகிருர்களே! நாம் தாழ்ந்த வற்றை எத்துணையகற்றி விடுகிறேமோ, அத்துணை அறிவும் ஒளி யும் பெறுகிறேம். அறிவும் ஒளியும் பெற்றவன் தவறிவீழ்ந்துவிடா மல் தன்னைக் காத்துக்கொள்க. அறப்பக் கருமங்களிலும் அவன் கருத்துடனும், தீவினை பவனைப் பற்றிக் கொள்ளாதவாறு தனக்கு அரண் செய்துகொண்டு மிருக்கட்டும்.

III

மக்கள் வாழ்வில் பலதிறப்பட்ட செயல்களெல்லாம், மக்க ளின் நெஞ்சத்திலேயே வேரூன்றிக் கிடக்கின்றன. அவை தமக்கு வலிமை பெறுவதும் ஆண்டிருந்தே. துன்பத்துக்கும் இன்பத்துக் கும் ஏது மக்கள் வாழ்க்கையின் புறச்செயல்களிலில்லை. ஆனல் நெஞ்சத்தினுடையவும், உளத்தினுடையவும் அகச்செயல்களி லேயே பதிந்துகிடக்கிறது. புறச்செயல் ஒவ்வொன்றும் மக்களின் நடையினின்றுந்தான் உயிர்பெற்று வாழ்கின்றது.

தன் தவறுகளையும் குறைகளையும் வெளிப்படுத்தப் பொருத வன், ஆனல் அவற்றை மறைக்க முயலுபவன் உண்மைநிலையை யடைய அருகனல்லன். அவாவுடன் போர் செய்து அஃதினை மேற் கொண்டுவிட அவன் இன்னும் தயாராகவில்லை. தன் தாழ்ந்த நிலை யைப் பயமின்றி எதிர்த்துப் போராடமுடியாத ஒருவன் நீத்தார் நிலையை யடைவது முடியாது.

IV

எடுத்த கருமங் கைகூடப் பெருமையினல் சோர்வடைந்து விடல் வேண்டா. அத்தவறுதலினின்றும் நீ அடையப்பெறும் ஓர் விதப் பெருமையும், அறிவும் உள. தவறினல் நீ பெறும் அனுப

வத்தைவிட பிறிதொரு ஆசான் அத்துணை உறுதியாய்த் துரிதமாய் உனக்கு அப்பெருமையையும் அறிவையும் அளித்துவிடமுடியாது. நீ தவறிழைக்கும்போதெல்லாம், தீவினையில் வீழும்போதெல்லாம் நீ அறிந்துகொள்ள முயற்சித்தால் சாலவும் முதன்மையான பாடம் மிளிர்ந்துகொண்டிருக்கிறது. அரித்துவிடுந் தகையதான கேடுகளி னும் நலத்தைக் கண்டுகொள்வோன் அமிழ்ந்துவிடான், மேலேறி விடுவான். தன் தவறுகளையெல்லாம் இறுதியான சீரிய வெற்றிக்குக் கருவிகளாய்க் கொள்வான்.

மூடர்களே தங்குற்றங்களுக்கும் தீவினைகளுக்கும் பிறரைப் பழிக்கிறார்கள். ஆனால் உண்மையை நாடுவோன் தன்னையே பழிக்கட் டும். தன் நடைக்குத் தானே பொறுப்பாளியென்பதை ஒப்புக் கொள்ளட்டும்.

V

புதியன தோன்றுமுன், பழையன கழிதல்வேண்டும். புதிய மாளிகை நிறுவப்படுமுன் அவணிருந்த பழைய குடிசை அழிக்கப் படல்வேண்டும். புதிய உண்மை துலங்குமுன் பழைய பிழை நீக்கப் படல்வேண்டும். புதிய மகனைப் நிலவுமுன் ஏற்கனவே பீடித்திருந்த 'நான்' என்பதை நீத்தல்வேண்டும். கோபம், பொறுமையின்மை, பொறாமை, அகந்தை, தூய்மையின்மையாதியவைகளா லாக்கப் பட்ட 'நான்' என்பது நசித்தபின்னர், அஃதிருந்தவிடத்தே அன்பு, பொறுமை, நல்லெண்ணம், அடக்கம், தூய்மையாகிய புதிய மகன் தோன்றுகிறான். தீவினையும், துன்பமுமாகிய பழைய வாழ்க்கை ஒழிக, நேர்மையும் மகிழ்ச்சியுங் கூடிய புதிய வாழ்க்கை தோன் றுக. பழைய அழுக்கடைந்தனவெல்லாம் அப்போழ்து புதியதாய் அழகுபெற்று விளங்கும்.

இக்கொள்கையை உணர்ந்து, அடையப்பெறுவதுதான் மேனுலகத்தையடைவதாகும். நிலையான பெருவாழ்வுக்கு அதுவே வழி, வீடுமஃதேயாம்.

கரந்தைத் திணை

[இளவழகனார்]

ஏறுடைப் பெருநிரை பெயர்தரப் பெயராது
இலைபுதை பெருங்காட்டுத் தலைகரந் திருந்த
வல்வில் மறவர் ஒடுக்கம் காணாய்
செல்லல் செல்லல் சிறக்கநின் உள்ளம்
முருகுமெய்ப் பட்ட புலைத்தி போலத்
தாவுபு தெறிக்கு மான்மேற்
புடையிலங்கு ஒள்வாள் புனைகழ லோயே.

(புறநானூறு, ௨௬௰)

'பக்கத்திலே விளங்குகின்ற ஒளி பொருந்திய வாளினையுங் காலிற் கட்டிய வீரக்கழலினையு முடைய வீரனே! தாம் களவிற் கவர்ந்து கொண்ட ஏறுகளையுடைய ஆனிரை முன்னே செல்லப் பின்னே மீட்க வருவாரான உங்களைப் பார்த்துவிட்டு அந்நிரையுந் தாமும் மேலே போகாமல், தழைகள் மூடிய பெரிய காட்டின்கண் தலை மறைந்திருக்கும் வலிய வில்லையுடைய மறவரது ஒடுங்கிய நிலையை எண்ணிப்பாராய்; தெய்வம் உடம்பிலே ஏறிய புலைமகளை யொப்பத் தாவித்துள்ளும் அவ்வானிரைமேல் நீ விரைந்து சென்று மீட்டல் செய்யாது அஞ்சித் திரும்பிச் செல்லற்க; திரும்பிச் செல்லற்க; நின் எண்ணம் நிறைவேறிச் சிறப்பதாக!

'கழலோயே! காணாய் செல்லல் நின் உள்ளம் சிறக்க' வென்று வினை முடிக்க. தாவுபு, இறந்தகால வாய்பாட்டு வினையெச்சம்.

இச்செய்யுள், கவர்ந்து சென்ற ஆனிரையை மீட்டல்வேண்டிக் கறுவொடு பின் செல்லும் வீரனுக்குப் பிறர் எழுச்சியுண்டாக்கி னமை தெரித்தது. ஆதலின், இது 'பிள்ளைப்பெயர்ச்சி' யென்னுந் துறையுள் அடங்கும்.

அயல்நாட்டு மறவர் இரவிலே வந்து தம்முடைய ஆனிரை களைக் கவர்ந்து சென்ற செய்தியை நிரைகாவலரிற் சிலர் வேந்தன்

பட்டினஞ் சென்று அறிவித்தாராதலின், அஃதறிந்த அப்பகைப் புலத்து வேந்தன் தம்மறவரைச் சினந்து நோக்கினான். அந்நாட்டுப் படைமறவர் உடனே வீரவெழுச்சி மிக்கவராய் அவ்வானிரைகளை மீட்டுவர லெண்ணிப் புறப்பட்டு மிக விரைவாய் வெட்சியாரைப் பின்பற்றிச் செல்கின்றார். சென்று வழியில் அவ்வெட்சி மறவரையுந் தந்நாட்டு ஆனிரைகளையுங் கண்டு அவரோடு போர் செய்து நிரைமீட்க முயல்வர். வெட்சியாரோடு பொருது நிரைமீட்க முயலும் அவ் வீரச் செய்கையே 'கரந்தை யொழுக்கம்' அல்லது **கரந்தைத்திணை** யென்று கூறப்படும்.

இனி இத்திணைக்குப் **புறப்பொருள் வெண்பாமாலை,**

> "கதமலி கரந்தை, கரந்தை யரவம்;
> அதரிடைச் செலவே; அரும்போர் மலைதல்;
> புண்ணொடு வருதல்; போர்க்களத் தொழிதல்;
> ஆளெறி பிள்ளை; பிள்ளைத் தெளிவே;
> பிள்ளை யாட்டொடு; கையறு நிலையே;
> நெடுமொழி கூறல்; பிள்ளைப் பெயர்ச்சி;
> வேத்தியன் மலிபே; மிகுகுடி நிலையென
> அருங்கலை யுணர்ந்தோர் அவைபதி னொன்கும்
> கரந்தையும் கரந்தைத் துறையு மென்ப" *

என்று துறைகள் கூறும்.

இவற்றுட் 'கரந்தையரவ' மென்பது, அயலார் நிரை கவர்ந்து சென்றா'ரெனுஞ் சொல் தம செவிகளில் விழாமுன்னமேயே பகைப்புலத்து மறவரெல்லாரும் வீரமும் எழுச்சியுஞ் சினப்பெருக்குங் கொப்புளித்துப் பொங்க நிரையை மீட்குமெண்ணம் உள்ளங் கவர்ந்து எழக் கழல் கட்டினார் சிலராயுங் கைச்சிலை கொண்டார் சிலராயும் வேலெடுத்தார் சிலராயும் வெகுண்டு நோக்கினார் சிலராயுங் காலனையொத்தார் சிலராயுங் கிளம்பிக் கரந்தைப்பூவைச் சூடி உடனே தடாரி யிசைத்துப் புறப்படும் புறப்பாட்டெழுச்சியை யுணர்த்துவதாம். இதனை **வெண்பாமாலை**

* புறப் - வெ, உ: க.

"காலார் கழலார் கடுஞ்சிலையார் கைக்கொண்ட
வேலார் வெருவந்த தோற்றத்தார்—காலன்
கிளர்ந்தாலும் போல்வார் கிணைப்பூசல் கேட்டே
யுளர்ந்தார் நிரைப்பெயர்வு முண்டு"*

என்று மிக அழகாகக் கூறும்.

இனி ஆனிரை சென்றவழியே அவற்றின் அடிச்சுவடு கண்டு வழிச்செல்லல் 'அதரிடைச் செல' வென்றும் (அதர் – வழி), வழியிடையே ஆனிரையையும் வெட்சி மறவரையுங் கண்டு அவரோடு போர் செய்தல் 'போர் மலைத' லென்றும், அங்ஙனம் பொரும் போழ்து அஞ்சாது போர் செய்து உடம்பிலே வேலும் வாளும் முதலிய படைகள் பட்ட புண்ணுடனே போர் முடிந்ததும் வீரர் சிலர் திரும்பி வருதல் 'புண்ணொடு வருத' லென்றும், ஒளித்தும் புறங்கொடுத்தும் தோற்றுப்போகாமல் வீரமாய்ப் பொருது அப் போர்க்களத்திலேயே மாண்டுபோதல் 'போர்க்களத் தொழித' லென் றுங் கூறப்படுகின்றன.

போர்க்களத்திலே பொருவாரையெல்லாம் விலக்கித் தானொருவனுமேயாகி வீரம் மிகுந்து எதிர்க்கும் வீரனது செயல் 'ஆளெறி பிள்ளை' யெனப்படும். ஆள் எறி பிள்ளை யென்பது எதிர்ப் பக்கத்து ஆட்களை வாளால் வெட்டுகின்ற பிள்ளையென்று பொருள் படும். 'பிள்ளை கடுப்பப் பிணம் பிறங்க வாள் எறிந்து' † என்னும் வெண்பாவில் எதிர்ப்பக்கத்தவரைக் குத்துதலும் வெட்டுதலுஞ் செய்யும் போர்ச்செய லியல்புக்குப் பிள்ளைத்தன்மை உவமிக்கப்பட்டிருத்தலானும், இவ்வுண்மையை 'விளைவறியாத பிள்ளையை யொப்பப் பிணம் பெருக்க வீரரை வெட்டி' யென்று அவ் வெண்பாவி னுரையே தெளிவாய் எடுத்துக் காட்டுதலானும் இங்கு ஆள் எறிந்த வீரன் ஆளெறி பிள்ளை யெனப்பட்டான். மேல் வரும் 'பிள்ளைத் தெளிவு' 'பிள்ளையாட்டு' என்னுந் துறைப் பெயர்களினும் 'பிள்ளை' யென்னுஞ் சொல் இப்பொருளையே உணர்த்தா நிற்கும். **ஆசிரியர் நச்சினார்க்கினியர்** பிள்ளை யென்

---

* புறப்-வெ. உ; † உ: எ.

பதைப் பிள்ளைப் பருவத்தோனென்று அகத்திணையியலில் * உரை கூறினாலெனின், பிள்ளைப் பருவத்தோர் போர்க்களத்திற் சேர்தல் அரிதாதலானும், மற்றும் அவருரைக்கூற்றுக்கு வேறு சான்றுகடாமுங் காணப்படாமையானும் அஃது உரையன்றென்று மறுக்க, பித்தரியல்பைப் போலப் பிள்ளைத் தன்மையையும் ஏனையோர் செயலுக்கு உவமையாய்க் காட்டும் மரபுண்மையின், பிள்ளை யென்பதை ஈண்டு உவமையாய்க் கோடலே வாய்வதா மென்க.

இனிப் 'பிள்ளைத் தெளிவு' 'பிள்ளையாட்டு' என்பன வீரர்கள் பிள்ளைத் தன்மையாற் போர்க்களத்தின் நடுவண் துடிகொட்டிக் கொண்டு தம் முடம்பிற்பட்ட புண்ணை விரும்பி வியந்து கூத்தாடுதலென்றும், பகைவ ருடம்பின் குடரைப் பிடுங்கித் தம தோள்களிலே மாலையாகச் சூட்டி வேற்படையை அடி நுனியாகத் திருப்பிப் பிடித்துக்கொண்டு அந்நிலைமை விரும்பிக் கூத்தாடுதலென்றுங் கொள்ளப்படும்.

புறந்தராது எதிர்த்துப் பொருது போர்க்களத்தில் வீழ்ந்து உயிரிழந்த வீரரைப் பார்த்து ஏனையோர் அவர் உயிரிழந்தபடியைச் சொல்லுதலும், மிக்க திறமாய் உண்மையுடன் பொருத வீரன் அரசன்பாலணுகி ஏனையோரினுந் தானே உண்மையாயுந் திறமாயும் பொருததாகத் தனது மேம்பாட்டை யெடுத்துக் கூறுதலும் முறையே 'கைப்று நிலை' 'நெடுமொழி கூற'லென்னுந் துறைகளாம்.

'காரி' யென்னுங் கரிக்குருவி வலமாகச் சென்று தான் செல்லுதலைத் தடுக்கவும் அதனையும் பொருட்படுத்தாமற் களஞ்சென்று பொருத போர்வீரன் ஆண்மையை அரசன் பாராட்டுதல் 'பிள்ளைப் பெயர்ச்சி' யென்று கூறுப.

இனி அரசனுக்காகப் போர்க்களஞ் சென்று பொருது உயிர் விடுதல் சிறப்பாமென்று அரசன் பெருமையை வீரர் மிகுத்துச் சொல்லுதல் 'வேத்தியன் மலி'பாம்.

உலகம் தோன்றியவுடன் முதன் முதலிற் றோன்றிப் புகழ் பெற்று வந்தது தமது குடியே யென்று மறவர் தமது குடியின்

---

* தொல், அகத், ௫.

வரலாற்றையும் பழமையையும் பிறரறியும்படி எடுத்துக் கூறுதல் "குடிநிலை" யென்னும் ஈற்றுத் துறையாகு மென்க.

கரந்தைத் திணைக்கென்று மேற் காட்டிய புறப்பொருள் வெண்பாமாலைத் துறைகளை யெல்லாம் இனித் தொல்காப்பியனார் கருத்தோடு இயைத்து ஆராய்தலும் ஈண்டொரு சிறிது வேண்டற்பாலது.

ஆசிரியர் தொல்காப்பியனார் எழுத்தையுஞ் சொல்லையும் அடுத்துப் பொருளிலக்கணம் உரைக்கப் புகுந்து முதலில் அகத்திணை யிலக்கணங் கூறிப் பின்னரதற்கினமான புறத்திணை யிலக்கணங் கூறுகின்றாராதலின், அவர் அப்புறத்திணை யிலக்கணத்திற் பகுத்தெடுத்துக் காட்டுங் கூறுபாடுகளெல்லாம் அவர்தம் அகத்திணை யிலக்கணக் கூறுபாடுகட்கு இனமுடையனவாகவே இருத்தல் வேண்டும். அகத்திணை யிலக்கணத்தில் அவர் பகுத்தெடுத்துக் கொண்ட திணைக் கூறுபாடுகள் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை, கைக்கிளை, பெருந்திணை என ஏழாம். அகத்திணையியற்குரிய இவ்வெழுவகைப் பகுப்பு,

"கைக்கிளை முதலாப் பெருந்திணை யிறுவாய்
முற்படக் கிளந்த வெழுதிணை யென்ப" *

என்னும் அகத்திணையிய னூற்பாவால் இனிது விளங்கும். தொல்காப்பியனார் பகுத்துக்காட்டிய இவ்வகத்திணைப் பகுப்புகள் ஏழுக்கும் வேறாக இதுகாறுங் குறைத்தோ கூட்டியோ வகுத்துக் காட்டினார் எவரும் இலர். தொல்காப்பியத்துக்குப் பின்னெழுந்த ஏனையெல்லா இலக்கண இலக்கியங்களும் இவ்வெழுவகைப் பகுப்பினையே மேற்கொண்டு வழி மொழிகின்றன. இனித் தொல்காப்பியத்துக்கு முன்னும் இவ்வேழு பகுப்புகட்கு வேறாய் அகத்திணையிலக்கணம் பகுக்கப்பட்டில தென்பதற்கு இலக்கியத்தின் பிழிசாறு ஆன அவ்விலக்கணத் தொல்காப்பியமே ஒரு பெரும் முதற்சான்றாய் நின்று நிலவுதலின், அங்ஙனமொன்றுங் கருதுதற்கில்லை. அன்றி, இன்றெவரேனும் யாமே இத்தமிழ் கூறு நிலத்

* தொல், அகத், ௧.

துக்குப் புதிது திணைப் பகுப்புகள் காண்பேமெனப் புகுந்து அடி நுனி யெல்லாந் துருவிச்சென்று திணைறித்திணைறி ஆராய்ந்து நுணுகி முடிப்பாராயினும், அவைதாமுந் தொல்காப்பியனார் வகுத் தமைத்த எழுதிணைப் பகுப்பினுமே அடங்கி அதற்கு வேறாகாமை கண்டு அயர்வர். இயற்கைப் பொருள்களும் வேறு கூறற்கு இன்னே வரையில் இடந்தந்தில. ஆகவே ஆசிரியர் தொல்காப் பியனார் பண்டு கண்ட இவ்வகத்திணை யெழு பகுப்புகள் சிறிதும் நிலையசையாவாய் அப்படியே நிலைபேற்று நின்றன வென்க. இவ் வாறு நிலைபெயராப் பகுப்புகளாக வகுக்கப்பட்ட அகத்திணைகள் எழு எனவே அவற்றிற்கு இனமாயமையும் புறத்திணைப் பகுப்பு களும் எழாதல் வேண்டுமென்பதும், அவைதாமுந் தம்மின் வேறுய்க் கூட்டியோ அன்றிக் குறைத்தோ பகுத்தாராயப்படு தற்குச் சிறிதும் இடந்தராத இயற்கைப் பகுப்புகளாய்த் திகழு நீர்மையவென்பதும் அகம்புறவறிவு வாய்ந்தாரெவர்க்குந் தெற்றென விளங்கா நிற்கும். குறிஞ்சி முதலான எழு அகத்திணைகட்கும் முறையே வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை, காஞ்சி, பாடாண் முதலான எழு புறத்திணைகளை இனமாய்க் காட்டி ஆசிரி யர் தொல்காப்பியனார்,

"அகத்திணை யிலக்கணம் அறிந்தப உணர்ந்தோர்
புறத்திணை யிலக்கணந் திறப்படக் கிளப்பின்
வெட்சி தானே குறிஞ்சியது புறனே"

'வஞ்சி தானே முல்லையது புறனே'

'உழிஞை தானே மருதத்துப் புறனே'

'தும்பை தானே நெய்தலது புறனே'

'வாகை தானே பாலையது புறனே'

'காஞ்சி தானே பெருந்திணைப் புறனே'

'பாடாண் பகுதி கைக்கிளைப் புறனே" *

என்னும் நூற்பாக்களால் இவ்வுண்மை யியல்பினை விளங்க உரைத் தார்.

---

* தொல், புறத், க, ௬, ௯, கசு, கஅ, உஉ, உ௫.

இனி அகப்பொருளுக்குப் புறப்பொருள் இனமாதலே வேண்டுமென்பதும், அவ்வாற்றால் அகத்திணைப் பாகுபாடுகளேழுக்கும் புறத்திணைப் பாகுபாடுகளு மேழாதலே வேண்டுமென்பதுங் கட்டாயமென்னேயோவெனின், அவ்வியல்பினையும் ஒரு சிறிது விளக்கிக் காட்டுவாம். பண்டைத் தமிழ்ப் பெருமக்கள் உயிரையே அகப்பொருளெனவும், அஃதொழிந்த ஏனை யெல்லாவற்றையும் புறப்பொருளெனவும் வகுத்தாராய்ந்தனரென்று முன் கட்டுரையிற் காட்டினும். இத்துணிபினைப் புரட்டுதற்கு எஞ்ஞான்றும் எவரும் முனையார். சற்று உற்றுக் காண்போமானால் உலகத்தில் நிகழும் எல்லாச் செயல்களும் உயிரின் செயல்களாகவே காணப்படுகின்றன. உயிர்களின் செயல்களெல்லாம் அவைதம்மின் உணர்ச்சிகளைக் கௌவிக் கிடக்கின்றன. உயிர்களின் உணர்ச்சி வகைகளோ ஐந்து வகைப்பட்டு நிகழும். அவைதாம் ஊறு சுவை ஒளி நாற்றம் ஓசை யென்பனவாம். இவ்வைவகைப்பட்ட உணர்ச்சிகளும் முறையே மண் புனல் தீ காற்று வான் என்னும் ஐவகைப்பட்ட புறப்பொருள்களைப் பற்றியே நிகழும். உயிர்கட்குப் புலனாகும் புறப்பொருள்கள் இவ்வைந்து வகைகட்கும் அடங்காதனவாய் எவையும் இல்லை. இனி இவ்வைந்து பொருள்களையும் நுகர்ந்து தம் உணர்ச்சி நிரம்புவதற்கு இவ்வைந்து பொருள்களாலும் ஆன உடம்புகளை உயிர்கள் பெற்றிருக்கின்றன. உடம்பு மண்ணாலும் நாக்கு நீராலும் கண் தீயாலும் மூக்குக் காற்றாலும் காது வெளியாலும் ஆக்கப்பட்டிருக்கின்றன. இவ்வைந்து வகைக்கு மேலாகவோ குறைவாகவோ உடம்பைப் பகுத்தாராய்தல் எவரானுங் கூடாமையாகும். எனவே மண் முதலான ஐந்து பொருள்களையும் மெய்முதலான ஐந்து கருவிகளின் வாயிலாக உயிர்கள் செயல் புரிந்து ஊறு முதலிய ஐந்துணர்ச்சிகளையும் பெறுகின்றனவென்க. செயல் புரியும்போது அவைதம்மின் உணர்ச்சிக்கு நேரே வருவன முறையே திண்மை தண்மை வெம்மை ஊக்கம் கலப்பு என்னும் ஐந்துணர்ச்சிகளேயாகும். இவ்வுண்மை,

> "தீயின் வெம்மை செய்தோன், பொய்தீர்
> ஊனிற் கலப்பு வைத்தோன், மேதகு
> காலின் ஊக்கங் கண்டோன், நிழல்திகழ்

நீரில் இன்சுவை நிகழ்ந்தோன், வெளிப்பட
மண்ணில் திண்மை வைத்தோன்".*

என்னும் மாணிக்கமொழிகளாற் றெளியப்படும். ஞாயிற்றுக்கு ஒளியும் திங்கட்குத் தண்மையும் மாணிக்கவாசகர் வேறு கூறினாராலெனின், அவைதாமும் முறையே தீயிலும் நீரிலும் அடங்குமாதலின் அது விறுவன்றென்க.

இனி இத் திண்மை முதலான ஐந்துணர்ச்சிகட்கும் ஊறு முதலான ஐந்துணர்ச்சிகட்கும் வேருக உயிர்கட்குப் பிற உணர்ச்சிகள் நிகழாவோவெனின், நிகழும். அவையே நட்பு அன்பு அறிவு காதல் அருள் என்னும் அகவுணர்ச்சிகள் ஐந்தென்க. மண் முதலான ஐந்து பொருள்களும் ஒன்றினென்றடங்காத வேறு வேறு தனிமுதற் பொருள்களாதல் போலவே, நட்பு முதலான இவ்வைந்து உணர்ச்சிகளும் ஒன்றினென்றடங்காத வேறு வேறு தனிமுதலுணர்ச்சிகளாம், மண் முதலான ஐந்திலும் ஏனைய பொருள்களெல்லாம் அடங்கி அமைதல்போல, நட்பு முதலான இவ்வைந்திலும் ஏனைய இயல்புகளெல்லாம் அடங்கிபமையும். மண்முதலான ஐந்து பொருள்களையும் நுகராத உயிர்கள் எங்கும் இலவாதல்போல நட்பு முதலிய ஐந்துணர்ச்சிகளையும் உணராத உயிர்கள் எவையும் இல. ஓரறிவு முதலாக நான்கறிவு ஈருக வாய்ந்த கீழ்நிலை யுயிர்கட்கும் இம்முடிபு பொருந்துமோவெனின், ஓராற்ருற் பொருந்தும்; மிகத் தெளிவாய் விளங்கும் ஓரறிவு முதலிய இயல்புபற்றி ஆசிரியன் ஓரறிவுயிர் ஈரறிவுயிரெனப் பிரித்து வரைந்தோதினமையால், அவ்வுயிர்கட்கு அவையொழிந்த ஏனைய அறிவுகள் சிறிதுமில்லையென்று கொள்ளற்க. எல்லாம் ஐந்தறிவுயிர்களேயாம். மக்களுயிர்க்குப் பகுத்தறிவென்பது ஏனையுயிர்களினும் விளங்கித் தோன்றும் இயல்புபற்றி அவ்வறிவினை அவைதமக்கே உரியதாய்க் காட்டி 'மக்கள் தாமே ஆறறிவுயிரே' †யென்று ஆசிரியன் வரைந்தோதினுல், ஏனையுயிர்கட்குப் பகுத்தறிவு சிறிதுமே யில்லையென்று எவருங் கொள்ளாரன்றே! ஆண்பெண் ணியல்புகள் மக்கண்மாட்டே மிகச் செவ்வையாய் விளங்கல் பற்றி அவர்கட்கே ஆண் பெண் பால்

---

* திருவாசகம், திருவண்டப், ௨௨-௬. † தொல். மரபு. ௩௬.

வகுத்து ஏனைய எவற்றிற்கும் அப்பிரிவினை செய்யாமல் அவை யெல்லாவற்றையும் ஒன்று பலவாக மட்டும் வரைந்தோதினமை யின், விலங்கு முதலிய கீழ் நிலையுயிர்கட்கு அவ்வாண் பெண் வகுப்புக ளில்லையென்று எவரேனுங் கூறத் துணிவரோ? துணியா ரன்றே! ஆதலால் உயிர்களெனப்பட்டவை யாவும் ஐந்தறிவுயிர்களே யாமென்று கூர்ந்தாராய்ந்து துணியப்படும். துணியவே, உயிர்க ளெல்லாவற்றிற்கும் மண் முதலான ஐம்பொருள்களாலும் திண்மை முதலிய ஐந்துணர்ச்சிகளும் நேரே உண்டாய், அவ்வைந்தும் ஊறு முதலான நுகர்ச்சிகளாய் மாறி நட்பு முதலான வேறு உணர்ச்சிக ளைந்தையும் நுட்பமாய் விளைக்கின்றனவென் றுணரப்படும்.

இவைதம்முள் திண்மை முதலான ஐந்து புறவுணர்ச்சி களையே வெட்சி முதலிய திணைகளென்று புறப்பொருளிலக்கணத் திலும், நட்பு முதலான ஐந்துணர்ச்சிகளையே குறிஞ்சி முதலிய திணைகளென்று அகப்பொருளிலக்கணத்திலும் ஆசிரியன்மார் கூறுவர். 'வெட்சி' யென்பதை வெட்சி யுணர்ச்சி யென்றும், 'குறிஞ்சி' யென்பதைக் குறிஞ்சி யுணர்ச்சி யென்றுங் கொள்க. இவைதம்மை விளக்கமாக வகுத்து விளக்குவாம்.

புறம்		கருவி	அகம்	
மண்	திண்மை (**வெட்சி**)	மெய்	ஊறு	நட்பு (**குறிஞ்சி**)
நீர்	தண்மை (**வஞ்சி**)	வாய்	சுவை	அன்பு (**மருதம்**)
தீ	வெம்மை (**உழிஞை**)	கண்	ஒளி	அறிவு (**பாலை**)
காற்று	ஊக்கம் (**தும்பை**)	மூக்கு	நாற்றம்	காதல் (**நெய்தல்**)
வான்	கலப்பு (**வாகை**)	செவி	ஓசை	அருள் (**முல்லை**)

இங்குக் 'கருவி' யென்னுந் தலைப்பின்கீழ் அமைந்தவை, புறத்துப் பொருள்களை அகத்துட் செலுத்துங் கண்ணாடியை யொத்துத் திகழு நீர்மைய. 'மாயாதனு விளக்கு' * என்னும் **மெய்கண்டதேவ நாயனாரின்** பொன்மொழி இங்குப் பெரிதும் நினைவுகூரற்பாலது. **இனி இப்புறப்பொரு ளுணர்ச்சிக்கும் அகப்பொரு ளுணர்ச்சிக்**

---

* **சிவஞானபோதம், சு: ௫.**

கும் வேறாய் உயிர்கட்குப் பொருந்துமுணர்ச்சி இவ்வெல்லாவற்றின் பயனான இன்பமென்பதொன்றேயாம்.

இனி, மேற்காட்டிய வாய்பாட்டுக்கு உயிர்கள் 'மண்ணின் திண்மையை மெய்ப்பொறியால் ஊறி நட்புணருகின்றன' வென்றும், 'நீரின் தன்மையை வாய்ப்பொறியாற் சுவைத்து அன்புறுகின்றன' வென்றும், 'தீயின் வெம்மையைக் கட்பொறியாற் கண்டு அறிவடைகின்றன' வென்றும், காற்றின் ஊக்கத்தை மூக்குப் பொறியான் முகர்ந்து காதலமைகின்றன' வென்றும், 'வானின் கலப்புணர்ச்சியைச் செவிப்பொறியாற் கேட்டு அருள்பெறுகின்றன' வென்றுங் கருத்துணர்தல் வேண்டும். இம்முறைகளையே அடிப்படையாய்க் கொண்டு உலகத்தின் பல்வேறு இயற்கைகள் வாய்ந்த நாடுகளையும் அந்நாட்டிற் பயிலும் மக்களின் நாகரிகத் தன்மைகளையும் முன்னேற்றங்களையும் ஆராய்தல் மிகவும் எளிதாகும். எனவே மண் முதலான புறப்பொருள்களின் பயனெல்லாம் அவற்றோடு முறையாய்ப் பயிலப்பயிலத் திண்மை முதலிய தன்மைகளாயும் ஊறு முதலிய செயல்களாயும் நுணுகிநுணுகிச் சென்று முடிவில் நட்பு முதலிய இயல்புகளாய் அமைந்து உயிர்கட்கு இன்பந் தருகின்றனவென் றறியப்படும். மண்முதலானவைகள் உயிர்கட்கு முறைமுறையே இவ்வுணர்ச்சிகளை விளைத்து அழிந்துபோக, உயிர்களும் அவற்றைப் போல் அப்போதே அழிதலில்லாத அவற்று உணர்ச்சிகளின் வழியே என்றுமே அழிதலில்லாத நட்புமுதலிய நுண்ணுணர்ச்சி நிலைக்கு வந்து இறுதியில் இறுதியிலின்பம் ஆரநுகருமென்க.

என்றித்துணையுங் கூறியவாற்றால், அகப்பொருட் கருத்துக்குப் புறப்பொருளமைப்புகள் இனமாகவே அமைந்திருக்கின்றன வென்பதும், அகப்பொருட் பாகுபாடுகள் எத்தனையோ அத்தனையேயாய்ப் புறப்பொருட் பாகுபாடுகள் விளங்கித் திகழுமென்பதும் புலனாதலோடு, அப்புறப்பொருள்களெல்லாம் உயிர்களின் உணர்ச்சி வழியே தமக்கு இனமான அகப்பொருள்களோடு நுணுகிப் பொருந்தி மாறின்றி நிற்குமென்னும் மேலொருண்மையும் நன்கு புலனாதல் காண்க. எனவே ஆசிரியர் தொல்காப்பியனார் அகத்திணைகள் ஏழுக்கும் இனமான புறத்திணைகளை எழெனக் கொண்டு

இனப்படுத்திக் காட்டும் இயற்கையுண்மை நிலைபெறாப் நின்று எமக் கெல்லாம் பெரியதோர் இறும்பூதினை விளைவியா நின்றது. அவ் வரும்பெறலாசிரியனார் அகத்துக்குக் குறிஞ்சி முதலிய ஐந்து திணைகளையும் புறத்துக்கு வெட்சி முதலிய ஐந்து திணைகளையுமே முதன்மையாய்க் கொண்டு, ஏனையிரண்டையும் அவ்வைந்தினுள் ளுமே அடக்குவர். இவ்வியல்பு 'காஞ்சி,' 'பாடாண்' திணைக் கட்டு ரைகளில் விளக்கப்படும். 'நடுவண் ஐந்திணை'* யென்று ஆசிரியர் ஐந்திணையை வேறெடுத்துக் காட்டுதலும் இதற்குப் பெருஞ்சான் ருயிற்று. ஆகவே மேற்காட்டிய உண்மைகட்குத் தொல்காப்பியனார் பாகுபாடு மாறுவதன்றென்க.

இனி ஆசிரியர் அகத்திணையேழுக்கும் இனமாக வகுத்துக் காட்டிய புறத்திணைகள் ஏழுமே பொருத்தமாய் நிற்றல் நன்கு விளங்குதலின், அவர்க்குப் பின்னெழுந்த **பன்னிருபடல**முடை யாரும் **புறப்பொருள் வெண்பாமாலை**யாசிரியரும் அகத்திணைகள் ஏழுக்கும் இனமாகும் புறத்திணைகள் பன்னிரண்டாமென்றது அத் துணைப் பொருந்துவதன்று. அற்றன்று, ஆசிரியர் தொல்காப்பியனா ருந் தமது புறத்திணையியற்கண் 'வெறியறி சிறப்பின் வெவ்வாய் வேலன்'† என்னும் நூற்பாவில் ஏழு துறைகள் காட்டிக் கரந்தைத் திணையை விளக்குகின்றாராலெனின், நன்கு வினாயினாய்; ஆசிரியர் ஆங்குக் கரந்தையொழுக்கத்தை ஒரு தனித்திணையாக எடுத்துக் காட்டுகின்றிலர். அதனை அவர் வெட்சித் திணைக்கண் அடக்கி அவ் வெட்சியின் வழுவெனவே கொண்டனர். மேலும் கரந்தையொழுக் கம் களவின் நிகழுதலல்லாமையால், நுணுகி நோக்கும் வழி அவ் வொழுக்கம் நிரைகோடலென்னும் ஓராற்றால் வெட்சித்திணைக்கண் அடங்குமாயினுங் களவின் நிகழுங் குறிஞ்சித் திணைக்கு அது புற னுதல் செல்லாமை நன்கு விளங்கும். 'வெறியறி சிறப்பின்' என்னும் அந் நூற்பாவினுட் கூறப்படுவனவெல்லாம் ஏனையெல்லாப் புறத்திணை களினும் அடக்கப்படுதற்குரிய வழுக்களேயாகும். 'கரந்தை யென் பது ஒரு தனித்திணையாயின் அஃது அகத்திணை யேழனுள் எந்தத் திணைக்குப் புறனுமென்னும் வினா வரும்; அதற்கு விடையிறுத்த

* தொல், அகத், உ.   † தொல், புறத். ரு.

லேலாமையின் கரந்தைச் செய்கையை ஒரு திணையாகக் கூறுதல் அடாதென்க.

அவ்வாறுயின் **ஆசிரியர் சிவஞான முனிவரர்** 'இவை இங்ஙனம் வேறுபடினும் புணர்ச்சி முடிபும் சொன்முடிபும் பொருண் முடிபும் வேறுபடாமையின் மரபுநிலை திரியாவாயின' என்று புறப்பொருட் பன்னிருபடலத்தையும் புறப்பொருள் வெண்பாமாலையைப் தொல்காப்பியப் புறத்திணையியலோடு இணக்கித் தமது தொல்காப்பியப் பாயிரவிருத்தியுள் உரை கூறினமை யென்னை யெனின், பன்னிருபடலம் முதலியவை கூறுங் கரந்தைக் கூற்றுத் தொல்காப்பியனுர் கருத்துக்கு மாறென்று யாமுங் கூறுகின்றிலம். மற்றுஅவ்வொழுக்கத்தினை ஒரு திணையெனக் கோடலே அவர்க்கு மாருமென்றனம். இதனைச் சிவஞான முனிவருந் தமதுரையிற் காட்டுதலின், அதனுல் ஈண்டைக்காவதோ ரிழுக்கேது மில்லை யென்க. புறப்பொருள் வெண்பா மாலையில், தொல்காப்பியவகத் திணையியல் கூறிய எழு திணைகட்கும் மிக்குவரும் ஏனைத் திணைக ளெல்லாவற்றிற்கும் இங்ஙனமே கருத்துக்கொள்க.

இனிப் பன்னிரு படலம் முதலியன திணையெனக் கொண்டு விளக்கா நிற்குங் கரந்தை யொழுக்கத்துக்கு வெற்றிப்பேறு தானும் உளதோவெனின், அதுதானு மில்லையென்பது புறப்பொருள் வெண்பாமாலையில் வரும் 'புண்ணொடு வருதல்' 'போர்க்களத் தொழிதல்' 'பிள்ளைத் தெளிவு' 'கையறு நிலை' 'நெடுமொழி கூறல்' என்னுந் துறைகளாலேயே நன்கு விளங்கும். மேலும், வெட்சி யார் கைப்பற்றிச் சென்ற ஆநிரையைக் கரந்தையார் மீட்டன ரென்பதற்கு ஏதொரு துறைச் செய்தியும் புறப்பொருள் வெண்பா மாலையிற் காணப்படவில்லை. வெண்பாமாலை யாசிரியர் கூருராயி னுந் தொல்காப்பியனுரே 'ஆபெயர்த்துத் தருத' லென்ருெரு துறை கரந்தை யொழுக்கக் கூற்றிற் கூறினராலெனின், அற்றன்று, கரந்தையாரைச் சார்ந்த குறுநிலமன்னரும் பிறருஞ் சேர்ந்து வெட்சியார் பற்றிய நிரையை ஒரோவொருகால் மீட்டுத் தருவ ரென்றே அவர் கூறினரென்க. இதனை நச்சினுர்க்கினிய ருரையிற் காண்க. அன்றிக் கரந்தை மறவரே ஒரோவொருகால் நிரை

பெயர்த்தனரென்று அத்துறைத் தொடருக்குப் பொருளுரைப் பதே யானும் அதனாலேயே கரந்தை யொழுக்கத்துக்கு ஒரு வெற்றிப் பேறுண்டாமா றில்லையென்க. என்னை? 'கரந்தை யொழுக் கம்' என்று எடுத்துக் கொண்டால், ஆபெயர்த்துத் தருதலென் பதையும் அதற்கோ ருறுப்பென எடுத்துக்காட்ட வேண்டுதலி னென்பது. ஆதலாற் கரந்தை யொழுக்கம் ஒரு தனித்திணை யாதற்குரிய சிறப்புடையதன் றென்பதே வலிவுடையதென் றறிந்து கொள்க.

புறப்பொருள் வெண்பாமாலை கரந்தை யொழுக்கத்துக் கெடுத்துக் காட்டிய போர்மலைதல், வேத்தியன் மலிபு, நெடுமொழி கூறல், ஆளெறிபிள்ளை, பிள்ளைத் தெளிவு, பிள்ளைப் பெயர்ச்சி என்னுந் துறைகளாறுந் தொல்காப்பியனார் அவ்வொழுக்கத்துக் குக் காட்டிய ஆரமரோட்டல், வேந்தன் சீர்சால் சிறப்பு, தலைத் தாள் நெடுமொழி, வருதார்த்தாங்கல், வாள் வாய்த்துக் கவிழ்தல், பிள்ளையாட்டு என்னுந் துறைகளுள் முறையே அடங்கும். ஏனைய மிகையான துறைகளாம். கரந்தை யொழுக்கத்தை ஒரு திணை யாயெடுத்தமையால், அதனை விளக்குதற்குப் புறப்பொருள் வெண்பா மாலை மேற்கொண்டு சில துறைகள் காட்டினமை அதுதனக்கு இயல்பேயாமென்க.

இனி அகத்திணைக் குறிஞ்சிக்கும் அதற்கினமான புறத்திணை வெட்சிக்கும் இயல்பி லமைந்துள்ள ஒற்றுமைத் தொடர்பும் இங்கு விளக்குதற்குரியது. ஒரு திணையை யெடுத்து விளக்க வேண்டு மானால் அந்தத் திணைக்கு உரிய முதல் கரு உரிப் பொருள்களை யாராய்தல் வேண்டும்.

> "முதல்கரு வுரிப்பொரு ளென்ற மூன்றே
> நுவலுங் காலை முறைசிறந் தனவே
> பாடலுட் பயின்றவை நாடுங் காலை" *

என்றார் **ஆசிரியர் தொல்காப்பியனாரும்**. முதற் பொருளாவன, நில மும் பொழுதும்; கருப்பொருளாவன, தெய்வம் உணா மா மரம்

* தொல், அகத், ௩.

முதலியன; உரிப் பொருளாவன புணர்தல் பிரிதல் இருத்தல் முதலியன; இவற்றுள் முதன்மையாய், ஈண்டைக்கு வேண்டிய வகையாய்க் குறிஞ்சித் திணைக்குக் கொள்ளத்தகுவன, நிலமும் பொழுதுமென்னும் முதற் பொருளும், பூவென்னுங் கருப்பொருளும், புணர்தலென்னும் உரிப்பொருளுமாம். அகப்பொருட் குறிஞ்சிக்கு நிலம் மலைசார்ந்த இடம்; பொழுது நள்ளிரவு; பூ அம்மலை நிலத்துப் பூ; புணர்தல் களவுப் புணர்ச்சியாகும். புறப்பொருள் வெட்சித்திணை இவ்வகத்திணைக் குறிஞ்சிக்கு இனமாதல் வேண்டுதலின், அப்புறப்பொருள் வெட்சிக்கும் அதாவது ஆநிரை கோடலென்னும் ஒழுக்கத்துக்கும் நிலம் மலைக்கானமே; பொழுது நள்ளிரவே; பூ அம்மலைக்காட்டிற் பூக்கும் வெட்சிப்பூவே; புணர்தல் களவினால் ஆநிரை கோடலே யென்க. இவ்வாற்றால் வெட்சி குறிஞ்சிக்குப் புறனாதல் கண்டுகொள்க.

புறத்திணை வெட்சிக்கும் அகத்திணைக் குறிஞ்சிக்கும் நிலம், மண்ணின் திரளையும் மண்ணி னியல்பும் மிக்கு விளங்குங் கரடுமுரடான மலைநில மாதலின், புறப்பொரு ளரசன் மண்வேட்கையால் வெட்சி யொழுக்கம் மேற்கொண்டான்; அகப்பொருட் டலைவன் அம்மண்ணினால் உருவாகி அதனினும் நுட்ப வியல்பு வாய்ந்த பெண்ணுடம்பு வேட்கையாற் குறிஞ்சி யொழுக்கம் மேற்கொண்டான்.

மண்ணினின்றும் உயிர்கட்கு நேரே உண்டாகும் உணர்ச்சி திண்மையாதலின், அத்திண்மை யெனப்படும் வலிவுணர்ச்சியினால் அரசன் போர்க்குத் தொடுத்த வெட்சி புறப்பொருளாயிற்று; அத்திண்மை யெனப்படும் நெஞ்சுறுதி வன்மையால் தலைவன் தன் தலைவியைக் களவாடுதற்கெண்ணிய குறிஞ்சி அகப்பொருளாயிற்று; போர்ச் செயல் விரும்பும் வலி வுணர்ச்சியும் தலைவியின் களவொழுக்கம் விரும்பும் நெஞ்சுறுதியு மென்னும் இரண்டுணர்ச்சிகளுந் திண்மையுணர்ச்சியே யாயினும் அவ்விரண்டி னுள்ளும் பின்னது நுட்பம் வாய்ந்ததாதலின், அஃதகமாதலும் முன்னது புறமாதலும் இயற்கையேயாதல் காண்க.

திண்மை யென்பது ஒன்றோடொன்று இணைந்து கூடி வலிவாகு மியல்பாதலின், அரசன் அயல் நாட்டையுந் தன்னாட்டொடு

கூட்டுங் கூட்ட வுணர்ச்சியினால் வெட்சி மேற்கொண்டான்; தலைவன் தன்னொடு தன் தலைவியைக் கூட்டும் நட்புணர்ச்சியினாற் குறிஞ்சி மேற்கொண்டான்; அரசன் கூட்ட உணர்ச்சியினுந் தலைவன் நட்புணர்ச்சி நுணுக்க முடைத்தாத லறிக.

அரசன் போருக்கு உடம்பின் வலிமை பயனுதல்போல, தலைவன களவொழுக்கத்துக்கு உடம்பின் ஊறு பயனுயிற்று. போர் முறைநிகழ்ச்சியில் ஓங்கிக் குத்துதலும் வெட்டுதலும் செய்யும் உடம்பு வன்மையினும் களவொழுக்க நிகழ்ச்சியில் மெல்லத்தொடுதலுந் தடவுதலுமான உடம்பினூறு நுட்ப முடைத்தாத லறியற்பாலது.

ஓரிடத்திற் பகை யுணர்ச்சி முதிர முதிரவே அது நுணுகி மற்றோரிடத்தில் நட்புணர்ச்சியும் மிகுமாதலின், அரசன் பகை யுணர்ச்சி புறமாயிற்று; தலைவன் நட்புணர்ச்சி அகமாயிற்றென்க.

இவ்வாற்றால் வெட்சிக்குங் குறிஞ்சிக்கும் அகப்புறப்பொருளாக மேலெடுத்துக் காட்டிய மண் திண்மை முதலாயின ஒன்றற் கொன்று இனமாதல் தெளியப்படும். மண்ணின் பொருட் பயிற்சி வெட்சி யென்னுந் திண்மை யுணர்ச்சியாய் நுணுகி ஊற்றுச் செயலாற் குறிஞ்சி யென்னும் நட்புணர்ச்சியாய்ப் பின்னும் நுணுகிப் புறப்பொருட் டலைவனுயிருந்த அரசன் அகப்பொருட்டலைவனும் மாற அவனுக்கு இன்பம் விளைத்து நிற்குமென்க. மலைக்கானங்களில் விலங்குகளை வேட்டையாடச் சென்ற அரசன் ஆங்கு விலங்கொடு போர் செய்து புறவுணர்ச்சி மிக்குப் புறப்பொருட்டலைவனுயிருந்து பின்னர் அவ்வுணர்ச்சி நுணுக நுணுக ஆங்கே அப்பொழுதே தன் தலைவியொடு களவிலொழுகி அகவுணர்ச்சி மிக்கு அகப்பொருட்டலைவனும் விளங்கும் இயற்கையும், வேட்டமேற் சென்ற அரசன் ஆங்கொரு பொழிற்கண் தன் தலைவியைக் கண்டு இயற்கைப் புணர்ச்சி யெய்தினனென்று அவ்வியல்பினை யெடுத்து ஒரு வரலாறுகத் தமிழிலக்கியங்க ளெல்லாம் ஒருவாய்ப்பட்டாற் போல் நுவலுதலும், அங்ஙனமே அவ்வரலாறுகள் நிகழ்ச்சியில் இயற்கையாய் நிகழ்தலும் அகத்திணைக் குறிஞ்சிக்கும் புறத்திணை வெட்சிக்கும் இனமிருக்கும் ஒற்றுமை யுண்மையைத் தெற்றென விளக்கி நிற்றலுங் காண்க.

சைவப்பெரியார் தனிக்கூட்டத்தின் அவசியமும் வேலையும்

[திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளையவர்கள், B. A., L. T.]

"ஞால நின்புக ழேமிக வேண்டுந்தென்
ஆல வாயி லுறையுமெம் மாதியே" சம்பந்தர்.

உலகத்திற் பல நாடுகளில் நிகழ்வது போலவே நமது நாட்டிலும் சில்லாண்டுகளாய்ச் செல்வ நிலை, அரசியல், சமூக அமைப்பு, சமய வாழ்வு முதலிய பல துறைகளிலும் விரைவான மாறுதல்கள் உண்டாகி வருகின்றன. இவற்றுள், சமூக அமைப்பிலும் சமய வாழ்விலும் தமிழ் நாட்டில் ஏற்பட்டு வரும் குழப்பம் பெரிது. சமயமும் சமூக அமைப்பும் பிரிக்க முடியாதபடி பின்னிக்கொண்டிருப்பது போல் காண்டலால், சமூகத்திருத்தக்காரர்களில், சமூக குறைகட்குச் சமயமே காரணமென்று கொள்ளுவோர் அதைக் கண்டிப்பதைத் தம் கடமையாகக் கொண்டு அவ்வேலையைத் தீவிரமாய்ச் செய்து வருகின்றனர். சமய நூல்கள், சமயக் கோட்பாடுகள், சமய அநுட்டானங்கள், சமய அமைப்புகள் ஆகிய யாவும் இந்நாளில் மேதை மரியாதை சிறிதும் காட்டப்பெறாது வெகு கடுமையாய்ச் சோதிக்கப்படுகின்றன. அவற்றுள் ஏதாவது பொய்ம்மை கலந்திருக்குமாயின், அதை உதறி விட்டு அடிப்படையான மெய்ம்மையைப் பலருமறிய நாட்டினாலன்றி, அவை விரைவில் மக்கள் நன்மதிப்பை இழந்து இழிவுபட்டொழிதல் ஒருதலை.

ஆனால் சமய நூல், கோட்பாடு, ஒழுகலாறு, அமைப்பு ஆகிய ஒவ்வொன்றிலும் கொள்ளத்தக்க பகுதி இது, கைவிடத்தக்க பகுதி இது என்று கணித்தற்குரியார் யாவர்? இந்நாளில் எழும் பேச்சையும் எழுத்தையும் பார்க்கையில், கருத்து வேற்றுமை பல திறத்ததாய்க் காண்கிறது. 'தலபுராணம் உள்ளிட்ட சமய நூல் ஒவ்வொன்றும், பிள்ளையார் சுழிமுதல் முற்றிற்று வரையில் முழு உண்மையே' என்று சத்தியஞ் செய்வோர் ஒரு கோடியில் உள்ளார்கள். 'இவை யாவும், வயிற்றுப் பிழைப்புக்காகவோ, மூளை கலக்கத்

தாலோ எழுதப்பட்ட முழுப் புளுகுகள், புரட்டுகள் அல்லது பிதற்றல்கள்' என்போர் எதிர்கோடியிலுள்ளார்கள். இவர்கட்கிடையே பல வேறு கொள்கையுடையாருமுளர். எல்லோருக்கும் பத்திரிகைகளும் பிரசங்க மேடைகளும் உண்டு. பேச்செழுத்துரிமை மிக்க இக்காலத்தில் ஜனத் தலைவர்களும் வழிகாட்டிகளும் பலப்பலர். இவர்கட்குள் நிகழும் பூசல்களும் மிகப்பல. ஒவ்வொரு தலைவரும் ஒவ்வொரு வழியில் ஜனங்களை இழுக்க முயலும் போது, தாமே உண்மை காணமுடியாத பொதுஜனங்கள் திகைத்து விழிக்கின்றார்கள். பழையன கழிகின்றன; புதியன புகுகின்றன. மாறுதல்கள் எல்லாம் நன்மை என்றுவது தீமை என்றுவது சொல்ல முடியவில்லை. பண்டைச் சமய அமைப்புகளும் அநுட்டானங்களும் நன்மை செய்யுமாற்றல் சுருங்கிப் புறக்கணிக்கப்படுகின்றன. நாள் முழுதும் தமக்குள் சண்டை சச்சரவு செய்துகொண்டிருக்கும் இடையர்கள் கைப்பட்ட ஆடுகள்போல் சமயச் சார்புள்ள மக்கள் நன்மை பெறுதொழிகின்றனர். இடையர் முகமே காணாத ஆடுகளும் பலவுள.

இப்படிப்பட்ட நிலைமையில் சைவமென்னும் பண்டைப் பெருஞ் சமயத்திற் பிறந்த **அறிஞர்கள்** செய்ப வேண்டிய கடமை யாது? மக்கட்குற்றுள்ள இடர்ப்பாட்டை உளங் கொள்ளாது வாளாகிடப்பதன்று; அது அருளொழுக்கத்திற்கு அடாது ஆதலின். சீர்திருத்தக்காரர் மேற் சீறி வீழ்வதுமன்று; பொது நலங் கருதியுழைக்கும் அவருட் சிறந்தாரும் இச்சீற்றத்திற் கஞ்சாது மீக்கொளச் சீறுதல் கூடுமாதலின், திருவருள் வலம் பெற்ற பெரியோன் அவதரித்தாற்றான் இச்சிக்கல் தீருமென்று வறிதே வருந்திக் கொண்டிருப்பது மன்று; அத்தகைய பெரியோன் வரவிற்கும் ஏனையோர் தவமுயற்சி வேண்டியிருத்தலின். மற்றென்னதான் செய்ய வேண்டும். அவரவர்க்குத் தோன்றியபடி பேசிக் கொண்டிருப்பதைவிட இப்போதுள்ள சைவர்களில், சமய நூல் வல்லோரும், சமய அநுட்டான உண்மை யுணர்ந்து கைக்கொள்வோரும், சைவ அமைப்புகளாகிய கோயில், மடம், சபை, அடியார் கூட்டம் ஆகிய இவற்றின் குணங் குறைகளை அநுபவத்தில் நன்குணர்ந்தோரும், சைவ போதகர்களும், பிற நாட்டுச் சமூக சமய அமைப்பு

வரலாறுகளை யறிந்த சைவ சமயிகளும் ஒன்று கூடி, தற்சமய நிலைமையை நன்காராய்தற்கு வழி தேட வேண்டுவதே முதலிற் செய்யற்பாலது.

இவ்வவசியத்தை உணர்ந்த சைவசித்தாந்த மகாசமாஜம் சென்ற டிசம்பர்மீ திருவாளர் திவான் பஹதூர் ஸர். T. N. சிவஞானம் பிள்ளையவர்கள் தலைமையில் நடந்த தனது ஆண்டு நிறைவு விழாக் கூட்டத்தில் பின் வரும் தீர்மானத்தை நிறைவேற்றியது;—

"தமிழ் நாட்டின் சமய வாழ்விலும் சமூக வாழ்விலும் தற்காலம் காணும் குழப்பங்கட்கும், சைவ மக்களின் ஆற்றற் குறைவிற்கும் காரணங்களைச் செவ்வையாய் ஆராய்ந்து, இக்காலத்தின் தேவைகட்கும் சைவ சமயம் எப்படி ஏற்றதாயிருக்கிற தென்பதை யுக்தி அனுபவங்கட் கொப்பப் புலப்படுத்தி, சைவ உலகிற்கு இந்நாளில் நல்வழி காட்டியுதவும் பொருட்டுச் சைவ அறிஞர்களின் தனிக்கூட்டமொன்று கூடிய விரைவில் கூட்டப்படுதல் அவசியம் என்று இம் மகா சமாஜம் கருதுகின்றது."

இத்தீர்மானம் விரும்பும் தனிக்கூட்டத்தை, வரும் ஈஸ்டர் விடுமுறையில் கூட்ட மகாசமாஜக் காரியதரிசியார் முயற்சி தொடங்கி யுள்ளார். தீர்மானத்தில் நான்கு விஷயங்கள் குறிப்பிட்டுள்ளன:—

(க) தமிழ் நாட்டின் சமய சமூக வாழ்வில் குழப்ப மேற்பட்டிருப்பது;

(உ) இவ்வாழ்வில் சைவ மக்களுக்குள்ள ஆற்றல் குன்றிக்காண்பது;

(ந) சைவம் இந்நூற்றூண்டிற்கும் ஏற்ற சமயமாயிருக்கு முண்மை;

(ச) க, உ-ன் காரணங்களை ஆராயவும், ந-ஐ யுத்தி அனுபவ வாயிலாய்ப் புலப்படுத்தவும் சைவ அறிஞர்களின் தனிக்கூட்டம் வேண்டிய அவசியம். இவற்றில் க, ச பகுதிகளைப்பற்றி மேலே கூறியிருப்பது சாலும். தற்கால சைவ மக்களின் ஆற்றற் குறைவைப்பற்றியும் விரித்துரைக்க வேண்டியதில்லை. அவரிற் பெரும்பாலோர் சமய ஞானமின்றிக்கெடுவதும், சமய அமைப்புகளின் நிலை திரிந்து நலிவதும், இக்கேடுகளைக் கண்கூடாகக் கண்டும் சமயப் பாதுகாப்புக்கான பெருமுயற்சிகளைச் சைவர்கள் ஒன்று சேர்ந்து பயன்படச்செய்யாது சுயநலச் சிறு

வாழ்வு வாழ்வதும் அவர்தம் ஆற்றற் குறைவைப் புலப்படுத்துமென்க. ௩-ம் பகுதியானது, தற்கால வாழ்க்கையின் இயல்பை உலக சரித்திர ஞானங்கொண்டு உணர்ந்து, அதன் நன்மை தீமைக் கூறுகளை யாராய்ந்து, சைவசமயத்தின் உயிர் நாடியான பெருங்கொள்கைகள் உலக மேதாவிகளின் உயரிய நோக்கங்கட்கு எவ்வாறு அரண் செய்கின்றன என்பதை விளக்குமாறு கேட்கின்றது, மக்கள் அன்றாட வாழ்வைப் புனிதப்படுத்தி அவர்களைப் பெருநெறி பிடித்தொழுகச் செய்யாத சமயம் வீழ்ந்துபடுதல் திண்ணம். அவ்வாறுதவும் ஆற்றல் சைவத்திற்குள தென்பதைப் பிறநாட்டு நல்லறிஞரும் அவர் மொழிபயின்ற இந்தியரும் பேணி ஏற்கும் வகையில் ஆங்கிலப் பயிற்சியுள்ள தமிழ்ச் சைவமக்கள் புலப்படுத்துதல் அவசியம்.

இப்பெருங் காரியங்களைச் செய்து முடித்தல் எளிதன்று என்பது மெய்யே, ஆனால் உழைப்பின் வாரா உறுதிகளில்லை; முயன்றால் விழுப்பயன் விளையும். மேற்சொன்ன சைவ அறிஞர் கழகம் செவ்வனே நடைபெற்று நாட்டிற்கு நன்னெறி புலப்படுத்த வேண்டுமாயின், பல வசதிகள் தேவையாம். அவற்றுட் சில பின்வருமாறு:—

(க) சைவ சமய வளர்ச்சி விரும்பும் யாவரும் இக்கழகம் நன்முறையில் நடைபெற வேண்டுமென்று வாழ்த்தித் திருவருட்டுணை கோரி வழுத்த வேண்டும்.

(உ) கழகத்தில் சேர்ந்து தம்மறி வனுபவங்களால் கூட்ட நடவடிக்கைகளை வளம்படுத்தக்கூடிய அனைவரும் எப்பாடுபட்டேனும், போதிய ஆயத்தத்தோடு ஷ கூட்டத்திற்குப்போந்து துணை செய்ய வேண்டும்.

(௩) வருவோர், இதுவரை தாம் தாம் கொண்டதே சரியென்றும், அதை நிலை நாட்டுதலே கடனென்றும் முடிவு கட்டிக்கொண்டு வாத தர்க்க மிடுதலிற் பயனில்லை. தாழ்வெனுந் தன்மையோடு போந்து, இத் தனிக்கழகத்தின் வாயிலாகத் திருவருள் நமக்கோர் பெருங்குறிப்பை புணர்த்துதல் கூடுமென்று மதித்து, தம் கருத்துக்களில் அவசியமான மாறுதல்களை மனச்சான்று காட்டும் வழி செய்துகொள்ளச் சித்தமாயிருக்க வேண்டும். எக்காரணத்தாலும் கூட்டத்தின் ஒற்றுமையைக் காத்து, பொது ஜனங்கட்கு இக்கழகம் தெளிவாக நல்வழி புலப்படுத்தும்படி அதன் வேலைகளை ஒழுங்குற நடத்த வேண்டும்.

(ச) சில நாள் எல்லையில் இக்கூட்டம் தனது பெரிய வேலைகளைச் செய்து முடிக்க வேண்டியிருத்தலால், பொழுதை வெகு செட்டாகப்

பயன்படுத்த வேண்டும். ஆராய வேண்டிய பொருள்களைப்பற்றிக் கூட்டத்திற்கு வருவோ ரனைவரும் முன்னமே தெரிவித்தல் நலம்.

(ரு) இப்பொருள்களைக் கேள்விகள் வாயிலாகச் சுட்டுவதோடு, அறிஞர்கள் அவற்றைப்பற்றி இப்போது கொண்டுள்ள கருத்துக்களைப் பதில் எழுதும் வாயிலாகப் பெற்றுக்கொண்டு, அவற்றை ஒல்லும் வகையில் தொகுத்து ஷை கூட்டத்தில் ஆயத்தப்படுத்துதல் நலம்.

(சா) காய்தலுவத்த லகற்றி உண்மைகாணும் ஒரே நோக்கத்தோடு அவசியமான ஆராய்ச்சிகள் செய்த பின்னர், பெரும் பாலோர் தீர்மானத்தைக் கழகத்தின் முடிபுகளாகக் கொள்ள வேண்டும். சிறுபான்மையோர் முக்கியமான விஷயங்களில் கருத்து வேற்றுமை கொண்டு அதை வெளியிட வேண்டுமென்று விரும்பினால் அவ்வாறும் செய்ய வேண்டும்.

(எ) இக்கழகத்தார் செய்யும் முடிவுகளையும், ஆலோசனைகளையும் புத்தகம்,பத்திரிகை, பிரசுரம் எனுமிவற்றின் வாயிலாகத் தமிழ் நாடெங்கணும் பரப்ப வேண்டும்.

(அ) இயன்ற மட்டில் சைவ மகாஜனங்களும் தனி மனிதர் கருத்தைவிட அறிஞர் பேரவையின் கருத்தே உயர்ந்த தென்றுணர்ந்து, இம் முடிவுகளை நன்கு மதித்துப் பின்பற்ற முயல வேண்டும்.

ஆராயப்படவேண்டிய பொருள்களைக் கேள்வி வடிவில் எழுதியனுப்புதல் ஓரளவு சாதகமா யிருக்குமென்று மேலே குறிக்கப்பட்டது. அவைகட்கு எடுத்துக் காட்டுக்களாய்த் தமியேனுக்குத் தோன்றுமவைகளில் சில குறிக்கத் துணிகின்றேன்:—

(க) நல்லொழுக்கம் வளர்க்கும் நாகரிகத்திற்குச் சமயம் அவசியமா?

(உ) அவசியமாயின் சமய வாழ்வின் இயல்பு என்னை?

(ங) இந்நூற்றாண்டில் எத்தகைய சமயம் தேவை?

(ச) சைவசமயம் அச்சமயமாயிருக்க முடியுமா?

(ரு) சைவ சமயத்தின் இன்றியமையாக் கோட்பாடுகளும் அநுட்டானங்களும் எவை?

(சா) சமயத்துக்குப் பிரமாண நூல் அவசியந்தானா?

(எ) அவசியமென்னில், சைவத்திற்குப் பிரமாண நூல் யாது?

(அ) தற்கால சரித சமய இலக்கிய ஆராய்ச்சி வல்லார் கூறுவதையும் உளங்கொண்டு பார்க்கின், சைவ சமயப் பிரமாண நூல்களை எவ்வகையில் எம்மட்டில் கொள்ளுவது?

(கூ) உயிரோடுள்ள பிற சமயங்களோடு சைவம் ஒத்துழைக்க வேண்டிய அளவும் முறையும் என்ன?

(ய) சைவர்கள் தமது சமயத்தைப் போதியவளவு பாதுகாவாது, தம் சமய சகோதரர்களைப் பிற சமயம் தழுவவோ, நாத்திகராய் நழுவவோ விட்டுக்கொண் டிருப்பதெதனால்?

(கக) சைவர் தொகை சுருங்குவதைத் தடுக்க வேண்டியது அவசியந்தானா?

(கஉ) அவசியமாயின் வழிவகை என்ன?

(கந) தமிழ்நாடு நீங்க, மற்றைய நாடுகளிலும் சைவக் கொள்கையைப் பரப்ப வேண்டியது அவசியமா?

(கச) அவசியமென்னில், காரணமென்ன? வழிகளெவை?

(கரு) கோயில்கள், மடங்கள், சைவத்திருக்கூட்டங்கள் ஆகிய இவற்றைச் சைவ சமய வளர்ச்சிக்குப் பயன்படுத்திக்கொள்ளுவ தெப்படி?

(கசு) சைவ மக்களுக்குள் சமய ஒற்றுமையும் பற்றும் உண்டாக்க வழியென்ன?

(கஎ) ஜாதிக்கும் சைவத்திற்கும் உள்ள சம்பந்தமென்ன?

(கஅ) தற்கால ஆசார சீர்திருத்தத்துக்குச் சைவம் எம்மட்டில் துணை செய்யவல்லது?

(ககூ) தீண்டா வகுப்பினர்க்குச் சமய உரிமை எவ்வளவில் தரப்படவேண்டும்?

(உ0) ஆலய மட பரிபாலனத்திலும், உற்சவ முறைகளிலும், சைவ மகாஜனங்கள் அங்கு வழிபடும் பழக்க வழக்கங்களிலும் ஏதேனும் சீர்திருத்தங்கள் செய்யப்பட வேண்டுமா?

(உக) அத்திருத்தங்களெவை?

(உஉ) அவற்றை எப்படிச் செய்வது?

(உந) பிறமதம் புக்கோரை மீண்டும் சைவத்தில் சேர்க்கலாமா?

(உச) ஆமெனின் எம்முறையில்?

(உரு) இவ்விஷயங்களில் சைவசித்தாந்த மகாசமாஜம் என்ன செய்யவேண்டும்?

இவைபோன்ற கேள்விகள் இன்னும் பல எழுப்பலாம். சிறியேனது சுருங்கிய அறிவுக்கேற்பச் சில குறித்தேன், பல அறிஞர்கள் இவ்வழி சிந்திக்கில் இன்னும் பல அவசியமான கேள்வி பிறக்கலாம்.

இவற்றை யெல்லாம் அன்பும், பணிவும், உண்மை நாட்டமும், ஒற்றுமை யுணர்ச்சியும் பொருந்திய மனத்தோடு அறிஞர்கள் ஆராய்ந்து, தம் கழக முடிபுகளை உலகிற்குத் தெரிவித்தல் பேருபகாரமாகும் என்பது வெளிப்படை.

சைவப் பெரியோர்கள், கழகத்தின் ஆராய்ச்சிக் குரியன வென்று தாம் கருதும் கேள்விகளை, 21-3-29-க்குள் மஹா சமாஜ காரியதரிசி யவர்கட்கு எழுதி அனுப்பும்படி வேண்டுகின்றேன். அன்றியும், அக்கழகக் கூட்டத்திற் கலந்து கொள்ளற்கு அழைத்தற்குரிய அறிஞர்கள் பெயர் விலாசங்களையும் ஒரு பட்டியிற் குறித்தனுப்பவும் கோருகின்றேன். அவர்கட்குச் சமாஜ நிருவாக சபையினர் பின்பு அழைப்புக் கடித மனுப்புவர். வேறு யோசனைகள் தோன்றினும் பெரியோர்கள் காரியதரிசிக்குத் தெரிவித் தருள்வார்களாக. "உள்ளுவ தெல்லாம் உயர்வுள்ளல்" "என்கடன்பணி செய்து கிடப்பதே" என்னு மொழிகள் நம்மை நன்முயற்சியில் ஊக்குவனவாக.

குறிப்பு:—நம் சமாஜத்து உதவித்தலைவர் திரு. ச. சச்சிதாநந்தம் பிள்ளையவர்கள் எழுதியவற்றை ஆலோசித்துப் பேரறிஞர்களும் சமயத் துறையில் தொண்டு புரியும் சபைகளும் தங்கள் கருத்துக்களைக் கீழே காணும் விலாசத்துக்கு விரைவில் தெரிவிக்க விரும்புகிறேன். திருநெல்வேலி நகரத்தில் ஈஸ்டர் விடு முறையில் (28-3-1929 முதல் 2-4-1929 வரை) சைவர் மகாநாடு கூட்ட ஏற்பாடுகள் நடந்து வருகின்றன. இப்பெருங் கூட்டம் இனிது நடைபெறுதற்கு அன்பர்கள் இயன்ற வரை போதிய பொருளுதவி புரியுமாறு வேண்டுகிறேன்.

அம்மகா நாட்டுக்குச் சைவப் பற்றுடைய பேரறிஞர்கள் வருகையும் சபைகளின் பிரதிநிதிகள் வருகையும் அன்புடன் எதிர்பார்க்கப்படுகின்றன.

இங்ஙனம்,

ம. பாலசுப்பிரஹ்மண்யம், காரியதரிசி,

சைவசித்தாந்த மகா சமாஜம்,

150, கோவிந்தப்ப நாயக்கன் தெரு, சென்னை.

திருமுருகாற்றுப்படை விளக்கம்

(இதன் உரிமை யாக்கியோற் குரியது.)

[திரு அ. நடராஜ பிள்ளையவர்கள்]

(௬௪-ம் பக்கத் தொடர்ச்சி)

(நச்சினார்க்கினியர் போக்கின்படி யுரைநடை)

(௨) திருச்சீரலைவாய்

நன்னெறியாள! அங்ஙனம் அத்திருப்பரங்குன்றில் எம்பெருமான் காணக்கிடையாவிட்டால், இருபுறமுந் தொங்குகின்ற மணிகளிரண்டும் மாறியொலிக்கின்ற மருங்கினையும், விரைந்த நடையினையும், கூற்றுவனைப் போன்ற எவராலுந் தடுத்தற்கரிய வலியினையும், காற்று வீசினாலொத்த வோட்டத்தினையுங் கொண்ட களிற்றின் மேலே, தோட்டி தாக்கியதா லுண்டான தழும்புகளும், செம்புள்ளிகளுங் கலந்து நிறைந்த நெற்றியின்கண் பொலந்தார்கள் முகபட்டத்தோடு தூங்கும்படி யேறி, தேவ வாத்தியங்களொலிக்கவும், வலிய வயிரத்தையுடைய கொம்புகள் முழங்கவும், வெண் சங்கங்கள் விளிக்கவும், இடி முழக்கம்போன்ற வோசையினையுடைய முரசுடன் பல கண்களைக் கொண்ட பீலிகளையுடைய மயிற்கொடியானது அகவா நிற்கவும் விண்ணிடத்தை வழியாகக் கொண்டு விரைவாகச் சென்று மிகுந்த சீர்த்தியினையுடைய திருச்செந்தூரிற் றிகழ்ந்திருத்தலுங் கூடும்.

எம்பெருமான் அங்ஙனம் யானையேறிச் செந்தூர் நோக்கிச் செல்லும்பொழுது, அவனது திருமுடிகளிலே பலவித வேலைப்பாடு

கள் நிறைந்த மகுடங்கள் தம்பாலுள்ள மாணிக்க முதலிய மணிகள்
வில்லிடும்படி பொலிவு பெற்று விளங்க, முழுமதியினை விட்டு நீங்கா
வுடுக்களைப்போல், மீன் வடிவினவாய்ச் செய்யப்பட்ட பொற்குண்ட
லங்கள் ஆறு திருமுகங்களோடுங் கூடி, அசைந்து மின்னிக்கொண்
டிருக்கும். மெய்யுணர்வினை விரும்பும் அடியார்களின் நெஞ்சத்
திலே எழுந்தருள்கின்ற அவ்வாறு முகங்களிலே யொன்று மறை
களிற் கூறிய முறைகளிற் றவறா வந்தணர்களின் வேள்விகள் நன்கு
நடைபெறும்படி திருவுளங் கூரும். மற்றொன்று பெரியோர்கள்
அறிவாற் சிறக்கும்படி திக்குகளை யெல்லாம் விளங்கச் செய்யும்.
வேறொன்று நடுவு நிலைமையினின்று நீங்கிச் சினத்தைக் கொண்ட
திருவுளத்தோடே பகைவரை யொழித்துக் களவேள்வியை நடத்து
விக்கும். இன்னொன்று வள்ளிநாயகியாருடன் சிரித்து விளையாடிக்
கொண்டிருக்கும். ஐந்தாவது திருமுகமோ, இருணிறைந்த இவ்
வுலகிற்குக் கதிரவன் மதி முதலிய விண்மணிகளைத் தோற்றுவித்
துக்கொண்டிருக்கும். ஆறாவது திருமுகமானது அடியார்கள் அன்
புடன் கூறும் புகழ்ச்சி மொழிகளை விருப்புடன் கேட்டு அவர்கள்
விரும்பியவற்றை வரையாது கொடுத்துக்கொண்டிருக்கும்.

அவ்வாறு முகங்களும் அங்ஙனம் நடத்தலினாலே, அவை
களுக்குத் தகுந்தாற்போல், பன்னிரு தோள்களில் இரு கைகள்
கண்டார் வியக்கும்படியான பெரிய பரிசையுடனே வேற்படையை
யும் வலமாகச் சுழற்றிக்கொண்டிருக்கும். இவ்விரு கைகளும் அந்
தணர் வேள்வியைப் பாதுகாக்கும் முதன் முகத்தின்பாற் பட்டன
வாம். மற்றொரு கை மோன முத்திரையோடு மார்பினிடத்தே
விளங்கா நிற்க, அதனோடிணைந்தவிடக்கை மார்பினின்றுந் தாழ்ந்து
தொங்குகின்ற தொடைகளோடே அழகு பெற்று விளங்கிடும். இவ்
விரண்டும் பெரியோர்களை யறிவாற் சிறக்கும்படி செய்த விரண்டா
வது முகத்தின்பாற் பட்டனவாம். ஒரு கையானது கைவளைக
ளுடனே மேலே சுழன்று களவேள்வி செய்வோர்க்குக் கட்டளை
கொடுத்துக்கொண்டிருப்ப, அதற்கிணையாய்க் கீழே படிந்த மற்
றைக் கை யானையி னிருமருங்குமிட்ட இனிய வோசையோடு
கூடிய மணிகளை மாறி யொலிக்கும்படி செய்துகொண்டிருக்கும்.
இவைகள் வேள்வி செய்விக்கின்ற மூன்றாவது முகத்தின்பாற்பட்

டனவாம். ஒரு கை நீல நிறத்தையுடைய முகிலினங்களினாலே மிகுந்த மழையைப் பெய்வியா நிற்க, மற்றைக் கை தெய்வயானை யார்க்கு மணமாலையைச் சூட்டிக்கொண்டிருக்கும். இக்கைகள் வள்ளி நாயகியாரோடு நகையமர்ந்த நான்காவது முகத்தின்பாற்பட்டனவாம். ஒரு கையானது வானிலே இயங்குந் தன்மையினையுடைய முனிவர்கட்குப் பாதுகாவலாக வுயர்த்தப்பெற்றது. அதற்கிணைந்த விடக்கை இடுப்பிலே வைக்கப்பெற்றது. இவையிரண்டும் இருணிறைந்த விவ்வுலகிற்குப் பகலவன் முதலிய பன்மணிகளைக் கொடுத்துக்கொண்டிருக்கும் ஐந்தாவது முகத்தின்பாற்பட்டனவாம். இனியொன்று எம்பெருமான் எழுந்தருளியுள்ள யானையைத் தோட்டியாற் செலுத்த அதற்கிணைந்த மற்றொன்று சிறந்த வுடையுடுத்த துடையின்மீது பொருந்திக் கிடக்கும். இவ்விரண்டும் அடியார்கள் விரும்பியவற்றை வரையாது கொடுக்கும் ஆறாவது முகத்தின்பாற் பட்டனவாம்.

எம்பெருமானது பன்னிரு தோள்களோ பொன்னரி மாலைகளை யணிந்ததும் அழகும் பெருமையுங் கொண்டதுமான மார்பிலேயுள்ள சிவந்த மூன்று வரிகளையும் தம்மிடத்தே வந்துவிடும்படி வாங்கிக்கொண்டு வலிமையாலே புகழ்நிறைந்து, படைக்கலங்களைப் பகைவர்மீது வீசி மார்பைப் பிளந்து அவற்றைத் திரும்ப வாங்கிக் கொள்ளும் பெருமையினை யுடையனவாம்.

பிரிவாற்றுமை

நமது தென்னிந்திய தமிழ்ச்சங்கத்தலைவர் சைவத் திருவாளர் திவான்பகத்தூர் Sir T. N. சிவஞானம்பிள்ளை யவர்கள் தம் அருமை வாழ்க்கைத்துணையை இழந்த செய்தி கேட்டுப் பெரிதும் வருந்துகின்றோம். இச்சங்கத்தின் இரக்கமுந் தேறுதல்மொழிகளும் நம்தலைவருக்குப் போதிய ஆறுதலையும்ஆற்றலையும் அளிக்குமென்று நம்பி நம் எல்லாம் வல்ல சிவபெருமானை அகமுருகி இறைஞ்சுகின்றோம்.

தென்னிந்திய தமிழ்ச்சங்கம்,
திருநெல்வேலி